6-3 26

பதினெண் சித்தர் திருமந்திரங்கள்

(அறிமுக உரையுடன்)

சி.எஸ். முருகேசன்

அழகு பதிப்பகம்
15/21, டீச்சர்ஸ் கில்டு காலனி, 2வது தெரு,
இராஜாஜி நகர் விரிவு,
வில்லிவாக்கம், சென்னை-600 049.
தொலைபேசி: 26502086

PATHINEN SIDDHAR THIRUMANTHIRANGAL

C.S. Murugesan

முதல் பதிப்பு	:	2004
விலை	:	ரூ.35.00
மொத்தப் பக்கங்கள்	:	104
வெளியிட்டோர்	:	அழகு பதிப்பகம் 15/21, டீச்சர்ஸ் கில்டு காலனி, 2வது தெரு, இராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை-600 049. தொலைபேசி: 26502086
ஒளி அச்சு மற்றும் முன் அட்டை வடிவமைப்பு	:	சு. அசோக்குமார், Digital Designer சென்னை-600 080. செல்: 94440 09048
அச்சிட்டோர்	:	சென்னை ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600 021. தொலைபேசி: 55692807

6-3

முன்னுரை

சித்தர் பாடல்களுக்கு பொருள் கூறுவது மிகக் கடினம். காரணம் என்னதான் தெளிபொருள் உரை கூறினும் அது மிகச் சரியானதுதான் என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. காரணம், ஏனைய இலக்கியப் போக்குகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது சித்தர் இலக்கியம். இலக்கிய, இலக்கண மரபுகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு அவர்கள் வாழ்ந்த பகுதியின் வட்டார சொற்களைப் பயன்படுத்தி பாடல்களைப் பாடியுள்ளனர்.

அவர்கள் பாட்டுகளெல்லாம் ஞானப்பாடல்கள். ஞானமறியா சதாரண மக்கள் பொருள் அறிந்து கொள்ள முடியாமல் மயக்கம்தான் கொள்கின்றனர். குரு-சிஷ்ய பாவத்தில் குரு வழியாகத் தாம் அறிந்து கொண்டதை எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் பாடி வைத்தாலும், அது தகுதியில்லாதார் கரங்களில் கிடைத்தால் பெருந்தீமை ஏற்படுமென்று கருதியே அவைகளை மந்திரங்களாகவும் மறைபொருள் களாகவும் பாடிவைத்தனர்.

இத்தகைய மந்திரங்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் ஒருவனுக்கு ஏற்படுமானால் அவன் அப்போது பரிபக்குவ நிலையில் மட்டுமே இருப்பான். அவனால்

அம்மந்திரங்களால் நன்மைகள் மட்டுமே செய்ய இயலும். தீமைகள் ஏதும் செய்ய சிந்தனை இடங்கொடாது என்பதால் மந்திர சூத்திரங்களாகத் தமது பாடல்களைப் பாடி வைத்தனர்.

மந்திரம் என்றதும், நம் நினைவில் வருபவை திருமூலரின் திருமந்திரப் பாக்களே. ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பட்ட இந்த நூல்களில் கூறப்படாத ஞான, யோக, தியானச் செய்திகளே இல்லை எனலாம். சித்தர் மரபும் திருமூலரிலிருந்துதான் தொடங்குவதால் அவரது கருத்துக்களே அவரைப் பின்பற்றிய சித்தரிடத்தும் எதிரொலித்தன. அவர்கள் பாடிய பாடல்களினூடே அந்த அரிய செய்திகளைப் பொதிந்து வைத்தனர்.

இதுமட்டுமல்லாது அவரின் திருமந்திரக் கருத்துக்களை அப்படியே சுருக்கம் செய்து பாடல்களாகப் பாடிய சித்தர்களுமுண்டு. அப்பாடல்கள் 'திருமந்திரம்' என்ற பெயராலேயே வழங்கப்படுகின்றன.

அந்தத் திருமந்திரப் பாடல்களுள் கிடைத்த ஒருசில இங்கு 'பதினெண் சித்தர் திருமந்திரம்' என்ற பெயரில் வெளியிடப் பெறுகின்றன. திருமூலரின் திருமந்திரத்தி லிருந்து இவைகள் வேறுபட்டவை என்பதைக் காட்ட ஓர் அறிமுகவுரை ஒவ்வொரு பாடல்களுக்கும் கூறப் படுகின்றன.

அத்துடன் திருமூலர் பெருமான் அருளிய திருமந்திர மாலை 300 என்னும் அரிய நூலையும் இதனுடன் சேர்த்து பதினெண் சித்தர் திருமந்திரங்கள் நூலினை முழுமை செய்துள்ளோம்.

கிடைக்கும் சித்தர் பாடல்களை முழுமையாக வாசகர்களுக்கு வழங்க வேண்டும் என்ற தணியாத ஆர்வமுடன் சித்தர் இலக்கியங்களைப் பதிப்பித்து வெளியிடும் பதிப்பாளர் திரு. ஆ. கோமதிநாயகத்திற்கு சித்தர் இலக்கிய உலகு கடமைப்பட்டுள்ளது. அந்தப் பெரிய பணியில் எனக்கும் ஒரு சிறிய வாய்ப்பளித்த நண்பருக்கு எனது நன்றிகள்.

வாசகர்கள் பயன்பெறும் பொருட்டு திருமந்திரங்களை வெறும் பாடல்களாகத் தராமல் அந்நூல்களைப் பற்றி ஓர் அறிமுகவுரையுடன் தருகின்றோம். வாசகர்கள் நன்மையடைவார்களாக.

அன்புடன்,

சி.எஸ். முருகேசன்

பொருளடக்கம்

பதினெண் சித்தர் திருமந்திரங்கள்

(அறிமுக உரையுடன்)

பதினெண் சித்தர் திருமந்திரம் - அறிமுகம்

திருமூலர் செய்த 'திருமந்திரம்' சித்தர் இலக்கிய உலகில் மிகவும் பிரசித்தி பெற்றது. அவர் ஒன்பது தந்திரங்களாக வகுத்துக் கூறியவற்றுள் இல்லாத சித்தர் கருத்துக்களே ஏதும் இல்லை என்று கூறிவிடலாம். மந்திரம், தந்திரம், யந்திரம், யோகம், ஞானம் இப்படி ஏகப்பட்ட தகவல்கள் அவர் நூலுள் காணப்படுகின்றன.

அவர் செய்த அந்தப் பொருள் பற்றி வேறு சில சித்தர்களும் தம் குருநாதர்களிடம் அறிந்தவரையில் உரைக்கத் தொடங்கினர். திருவள்ளுவர் என்ற சித்தர் அவ்விதம் உரைத்தது ஞானவெட்டியான் என்ற தனி நூலாக உருவானது. ஏனைய சித்தர் பாடல்கள் போற்றப்படாது ஒழிந்தன. கிடைத்தவற்றுள் சில செப்பம் செய்யப்பட்டு பிறரால் வெளிக்கொணரப்பட்டன.

திருமந்திரம் பற்றி சித்தர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு இது. இப்பொருள் குறித்து சுப்பிரமணியர், போகர், கருவூரார், கொங்கணவர், ஜெயமுனிவர், சுந்தரானந்தர் ஆகிய சித்தர்கள் பாடிய பாடல்கள் சித்தர் பாடல் தொகுப்பில் காணப்படுகின்றன. இத்துடன் திருமூலரின் திருமந்திர மாலை 300ம் கொடுக்கப் பட்டுள்ளது.

❋❋❋

1. சுப்பிரமணியர் ஞான மந்திரம்

அகத்திய மாமுனி தான் பெற்ற தமிழ் செய்திக ளெல்லாம் தம் குருநாதர் சுப்பிரமணியர் மூலம் பெற்றதாகச் சில இடங்களிலும் சிவபெருமான் உபதேசம் பெற்று உரைத்ததாகப் பல இடங்களிலும் குறிப்பிடு கின்றார். சித்தர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட குருவைக் கொண்டிருப்பது என்பது இயல்பான ஒன்றுதான். சிவபெருமானின் மைந்தர்தான் சுப்பிரமணியர் என்றும், இவரும் சித்தர் கூட்டத்துள் ஒருவராகி அகத்தியருக்குத் தமிழை உபதேசித்தார் என்பதும் இலக்கிய வழக்கு. அப்படி சுப்பிரமணியர் அகத்தியருக்கு உபதேசித்தவற்றுள் ஒன்று இந்த ஞான மந்திரமாகும்.

இதில் வசி, நசி, மசி, கசி என்ற மந்திரமும் உச்சரிக்கும் பலனும், மிருக வசியம் முதலான தந்திர வகைகளும் தும்பையின் வைத்திய விபரமும் குறிப்பிடுகின்றார்.

சுப்பிரமணியர் ஞான மந்திரம் 6

வசிவசி யென்றுநித்தம் செபித்தாயாகில்
மகத்தான சகலசௌ பாக்கியமுண்டாம்
நசிநசி யென்றுநித்தம் செபித்தாயாகில்
நலமில்லாச் சகலவினை நாடாதோடும்
மசிமசி யென்றுநித்தம் செபித்தாயாகில்
மகத்தான கசமுதலாய் ரோகந்தீரும்
கசிகசி யென்றுநித்தஞ் செபித்தாயாகில்
கனத்தெழுந்த சிலந்திபுண் கறைந்துபோமே. 1

போமப்பா அங்கிலிசிவ சீசீயென்ன
பொல்லாத மிருகமெல்லா மோடிப்போகும்
ஆமப்பா ஐயுஞ்சவ்வும் கிலிவாவென்ன
அடங்காத மிருகமெல்லாம் ஓடிப்போகும்
ஓமப்பா கிலியும்சவ்வும் ராங்ராங்கென்ன
உத்தமனே பக்ஷியெல்லா மொடுங்கிநிற்கும்
தாமப்பா நிலையறிந்து தியானஞ்செய்யத்
தானவனா யிருந்துசித்து மாடலாமே. 2

இருந்துநிலை தனையறிந்து யோகஞ்செய்ய
ஏகாந்த மாமுனியே யொன்றுகேளு
வருந்திநின்ற மிருகமெல்லாம் வசியமாகும்
மார்க்கமுடன் மந்திரந்தா னொன்றுகேளு
அருந்தவமாய்ச் சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
அக்குஅக்கு யென்றுநித்தம் அழுத்தியூது
பரிந்தாவா மிருகமெல்லாம் அசந்துபோகும்
பாலகனே சுழிமுனையிற் பதிவாய்நில்லே. 3

பதிவான விஷங்களெல்லாந் தீருதற்குப்
பாலகனே மந்திரந்தா னொன்றுகேளு

கெதியான அட்சரந்தான் சீசிங்சீநசிநசியென்று
கிருபையுடன் பதினாறு உருவேசெய்து
மதியான விபூதியைநீ கடாக்ஷித்தாக்கால்
மகத்தான விஷங்களெல்லாம் மாண்டுபோகும்
விதியாளி யானதினாற் சொன்னேன்மைந்தா
வெகுவிதமாய் அவரவர்கள் ஜெபித்தார்தானே. 4

செபிப்பதற்கு வெகுசுருக்கு மைந்தாகேளு
செலமதிலே தான்ஜெபித்துக் கொடுக்கலாகும்
தவிப்பகலக் குளைப்பார்வை பார்க்கலாகும்
தகனிளைந்து மந்திரத்தைச் செபிக்கலாகும்
குவிப்பான சிலந்திமுதல் வீக்கத்திற்கும்
குணமாகும் வெண்ணெயிலே தியானம்பண்ணு
கவிப்பான விஷமுதலாம் சில்விஷங்கள்
காணாம லோடுதற்குக் கருவைக்கேளே. 5

கருவான மூலிகைதான் தும்பைவேந்தன்
கடிசான மேனியுடன் மூன்றுங்கூட்டி
உருவான நவச்சாறுங் கொஞ்சங்கூட்டி
உத்தமனே கசக்கியந்த நயனத்தூட்டு
பெரிதான விஷங்களது தலைமேற்கொண்டால்
பிழிந்தவுடன் ஓடுமடா பிணமானாலும்
விரிவான பசாசுமுதல் ஜன்னிக்கெல்லாம்
விபரமுள்ள நசியமதால் விட்டுப்போமே. 6

✲✲✲

உ. போகர் திருமந்திர ஞானம்

திருமூலரின் சமகாலத்தவராகக் கருதப்படும் போகர் தமிழில் சித்தர் இலக்கியங்களின் தந்தை என்று சிறப்பிக்கப்படுகின்றார். ஆனால் இவர் தமிழில் செய்த நூல்களைவிட சீன மொழியில் செய்த நூல்களே மிக அதிகம் என்று கூறப்படுகிறது. சீன நாட்டில் போ-யாங் என்ற சீனரின் உடலில் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து சித்து விளையாடியவர் என்றும், அங்கிருந்து பின்னர் தமிழ்நாட்டிற்குத் திரும்புகையில் புலிப்பாணி என்ற சீடரையும் தம்முடன் அழைத்து வந்ததாகவும், பழனியில் நவபாஷாணக் கட்டால் முருகன் சிலையை நிறுவி பூசை செய்து தனக்குப்பின் அதனை புலிப்பாணி தொடர ஏற்பாடு செய்ததாகவும் போகர் வரலாறு தெரிவிக்கின்றது.

போகர் திருமந்திர ஞானம் என்ற பாடலில் மனித உடலில் காணப்பெறும் ஆறாதாரச் சக்கரங்கள் அறிமுகப்படுத்தப் பெறுகின்றன.

போகர் திருமந்திர ஞானம் 10

காணவே மூலமது அண்டம்போலக்
　　காரணமாய்த் திரிகோண மாகநிற்கும்
பூணவே மூன்றின்மேல் வளையமாகும்
　　புறம்பாக இதழதுதான் நாலுமாகும்
நாணவே நாற்கமலத் தட்சரத்தை
　　நவிலுவேன் வயநமசி றீறீயாகும்
ஊணவே முக்கோணத் துள்ளோங்காரம்
　　உயர்ச்சியா மதற்குள்ளே அகாரமாமே. 1

அகாரத்தின் மேலாகக் கணேசர்நிற்பார்
ஆதியொரு கோணத்தின் உகாரம்நிற்கும்
உகாரத்தில் வல்லையாள் சத்திநிற்பாள்
ஒடுங்கியதோர் முனையொன்றிற் கதலுப்பூவாய்
எகாரமாய் முகங்கீழ்க்குண் டலியாஞ்சத்தி
யெனும்பாம்பு போலுருட்டிச் சீறிக்கொண்டு
சிகாரமாய்ச் சுழிமுனையோ டுருவிநிற்பாள்
திகழ்துரியா தீதமென்ற அவஸ்தைதானே. 2

அவத்தைக்கு இருப்பிடமும் மூலமாகும்
அந்தகத லிப்பூவெட் டிதழாய்நிற்கும்
நவத்தைக்கும் நந்தியனுள் வாயில்நிற்பாள்
நற்சிவமாஞ் சிகாரத்துக் கோடியானும்
வவத்தைக்கும் வாய்திறவான் மலராய்மூடும்
மைந்தனே யெட்டிதழி லெட்டுச்சத்தி
பவத்தைக்குச் சத்தியெட்டின் பேரேதென்றால்
பாங்கான அணிமாவும் மகிமாத்தானே. 3

தானான மகிமாவும் லகிமாவோடு
தம்பிரகா மியம்பிராத்தி யீசத்துவம்
பேனான வசத்துவமா மென்றசத்தி
பேரெட்டுத் தேவதையுந் தளத்தில்நின்று
ஏனான இதழாலே மூடிக்கொள்வார்
ஏத்தமாய் நந்தியைத்தான் காணவிடாமல்
வானான வஸ்துவைநீ பானம்பண்ணி
வங்கென்று வாங்கியே கும்பிட்டு ஊதே. 4

ஊதினா லெனதுசத்தி லகிரியாலே
உலாவுவலா ரிதழெல்லாந் திறந்துவிட்டுப்
போதினா லாயிசொன்ன யேவல்கேளு
பூந்துபார் நந்திகண்டால் யோகமாகும்

வாதினால் பத்தான வருஷத்துக்கும்
வாசலையே திறவாமல் மூடிக்கொள்வான்
ஏதினா லிதுக்குள்ளே வாசிமாட்டு
யிடத்தோடி வங்கென்று உள்ளேவாங்கே. 5

வாங்கியே நந்தியிற்சிங் கென்றுகும்பி
வலத்தோடி சிங்கென்று உள்ளேவாங்கித்
தாங்கியே வங்கென்று இழுத்துக்கும்பி
தளமான தெளிவாறும் வெளியாய்க்காணும்
ஓங்கியே மாணிக்க வொளிபோற்றோன்றும்
உத்தமனே மூலத்தி னுண்மைகாணும்
தேங்கியே வல்லையாஞ் சத்திதானும்
சிறந்திருந்தாள் பச்சைநிற மாகத்தானே. 6

பச்சைநிற வல்லையைப் பணிந்துபோற்று
பாங்கான வாறுக்கும் பருவஞ்சொன்னாள்
மொச்சையாய் மூலமது சித்தியானால்
மூவுலகுஞ் சஞ்சரித்துத் திரியலாகும்
கச்சைநிறக் காயமுமோ கனிந்துமின்னும்
கசடகன்று ஆறுதலந் தன்னிற்றோன்றும்
துச்சைநிற வாதஞ்சொற் படியேகேட்குந்
துரியத்தின் சூகமெல்லாந் தோன்றும்பாரே. 7

பாரென்ற புரியட்ட நாலிற்சேர்க்கும்
பளிச்சென்று மூலத்திற் சோதிகாணும்
காரென்ற தீபவொளி கண்ணோசூசும்
கணபதியுங் கண்முன்னிர்த் தனமேசெய்வார்
ஊரென்ற யோகத்துக் குறுதிசொல்வார்
உற்பனமாம் வாதத்தி னுண்மைசொல்வார்
நேரென்ற சதா சிவத்தின் நிலையுஞ்சொல்வார்
நீச்சென்று விட்டாக்கால் யோகம்போச்சே. 8

போச்சென்று விடுகாதே மூலந்தன்னைப்
போகையிலும் இருக்கையிலும் மன்த்தையூணு
பேச்சென்ற பிறர்சத்தங் கேளாப்பக்கம்
பிரத்திருந்து லட்சியத்தைப் பூட்டிவாங்கு
மாச்சென்று வாசியைநீ தவறொட்டாதே
மனந்தன்னை மூலத்தில் மருவிச்சேர்க்கும்
வேச்சென்று கடினம்போல் முன்னேகாணும்
விடுகாதே மாச்சலதாய் விரைந்துஉன்னே. 9

உன்னியே பழகுமட்டுங் கடுசாய்க்காணும்
உட்புகுந்து பார்த்துவந்தா லுறுதிகூடும்
வன்னியே துலங்கமட்டும் மனஞ்சலிக்கும்
மாசற்ற வொளிவுகண்டால் மகிழ்ச்சியாகும்
பின்னியே பிங்கலையு மிடையிற்கூடும்
பேரான சுழினைதன்னில் நெட்டிட்டேறும்
நன்னியே நமன்வெருண்டு அப்பாற்போவான்
நாளெல்லாங் கடிகையுமாய் நாட்டமுற்றே. 10

✻✻✻

3. கருவூரார் திருமந்திர சூத்திரம்

இவர் போகரின் சீடர்களில் ஒருவர். தஞ்சைப் பெருவுடையார் கோயில் குடமுழுக்குத் தடைபட்டு நின்ற காலத்து தம் குருநாதரின் கட்டளைக்கேற்ப அஷ்டபந்தன மருந்தைக் கெட்டிப்படுத்தி பெருவுடையாரை நிலைப் படுத்தியவர். சிலை வடிப்பதில் வித்தகரான இவர், ஆலயந்தோறும் சென்று உற்சவ விக்கிரகங்கள் இல்லாத ஆலயங்களுக்கு உற்சவரை வடித்துக் கொடுத்தார்.

இரசவாத செயல் செய்வதில் இவர் வல்லவராயிருந்தமை இவரைப் பற்றி வழங்கப்படும் கதைகளில் உறுதிப்படுகிறது.

இவரது சித்தர் இலக்கிய பாடல் தொகுப்பில் திருமந்திர சூத்திரம் என்ற பெயரில் 11 பாடல்கள் காணப்படுகின்றன. இந்த சூத்திரத்தில் குருவருள் அஷ்டமாசித்தி, சீடர் பிரமாணம், பிரணாயாமம், ஐந்தெழுத்து மந்திரம் முதலியவை விளக்கப்படுகின்றன.

கருவூரார் திருமந்திர சூத்திரம் 11

பாடுகிறேன் திருமந்திர சூத்திரந்தான்
பாங்கான பார்வதித்தாய் பாதம்போற்றி
நாடுகிறோம் நகாரமுதல் மகாரந்தொட்டு
நலமான சிகாரமது அதற்குட்காணும்
தேடுகிறோ மாதுமுத லுப்புக்காய்ச்சி
செகசால மாடுகிற கருவுங்கவட்டி
ஆடுகிறோம் குகைசெய்து சூதமிட்டு
ஐந்தெருவிற் புடம்போடச் சிகப்புமாமே. 1

ஆமப்பா துலாத்தோருக் கெழுத்துக்காணும்
அப்பனே கன்னியென்ற ராசியோர்க்குத்
தாமப்பா ரெண்டாண்டி லெழுத்துக்காணும்
சாதகமாய் நகாரமுதல் மகாரந்தானும்
நாமப்பா ஒளிக்கறியோம் சிங்கென்றூணி
நாட்டுவாய் சுழிமுனையில் நாட்டம்வைத்துத்
தேமப்பா குருபதத்தை அடுத்துக்காத்துத்
தெரிசித்துச் செகசாலத் தொழிலைக்கேளே. 2

கேளப்பா முந்தியதோர் பிராணாயந்தான்
கேசரியி லிடவலமா யாட்டித்தீரும்

நாளப்பா லட்சமுருச் செபித்தாயானால்
நலமான சுழிமுனைதான் திறக்கும்பாரு
நீளப்பா யிப்படியே செய்தாயானால்
நிலைத்துதப்பா உன்சடலம் நிருபியாவாய்
வாளப்பா கற்பமது முன்னேகொண்டால்
வகையான தீட்சையெல்லாம் வருகுந்தானே. 3

தானென்ற குளிகையது சொல்லக்கேளு
சதிரான மூன்றெழுத்தில் விந்துநாட்டிக்
கானென்ற பத்துலட்ச முருவேசெய்தால்
கடலேழுந் தாண்டுமப்பா கெவுனவேகம்
வானென்ற குளிகைசா ரணையைத்தீர்த்து
வகையான குருபதத்தை வணங்கிக்காத்துத்
தேனென்ற வாய்ப்பேச்சை மயக்கஞ்செய்யும்
செகசாலச் சீடனையுஞ் சேர்த்திடாதே. 4

சேராதே துஷ்டர்களை யடுத்திடாதே
செந்தூர மெழுத்தறியார்க் கீய்ந்திடாதே
காராத சீஷனுக்கு யிடங்கொடாதே
கருத்தறியா மூடருக்கு உரைத்திடாதே
பேரான பெரியோர்க ளறிந்தவித்தை
வெரும்வீணர்க் கோதாதே வேதம்வேதம்
ஆராலு மறியாத ஆயிபாதம்
அனுதினமும் மனதறிவிற் காட்டுந்தானே. 5

காட்டான குருபதத்தை யடுத்துக்காரு
கனகமவர்க் கெய்தெல்லாங் கனிந்துநேரும்
பூட்டாமைங் கோணமுத் திரையைக்கேளு
பொருந்தியதோ ரிரண்டெழுத்தி னாட்டைக்கேளு
தேட்டான தேட்டெல்லா மவள்தன்தேட்டு
செகஜாலத் தாய்பதத்தை தினமும்போற்று

பாட்டான தீட்சைவிதி பிராணாயந்தான்
பாங்கான வாணிகருக்குச் சொரூபியாமே. 6

ஆமப்பா அஷ்டமா சித்திகேளு
அழகான அகாரமது முன்னேநாட்டித்
தேமப்பா யெட்டெழுத்து மிரண்டுங்கூட்டித்
தியானிக்க மோகந்தான் தெளிந்துபாரு
ஓமப்பா ஓரெழுத்து மிருபத்தஞ்சு
உத்தமனே சுழிமுனையில் நிறுத்திப்பாரு
தாமப்பா யிதினாலே யெட்டோடெட்டும்
சாதகமா யறுபத்தி நாலுமாச்சே. 7

ஆச்சிந்த வகையாலே சித்தர்செய்தார்
ஆதியென்றும் பராபரத்தா யருளைப்போற்றிப்
பூச்சிந்த ஆயியுட வித்தையெல்லாம்
புகழான குருவருளாற் கண்டுதேறு
ஏச்சந்தக் குருவருளை வாங்கிக்கொண்டால்
இயலான பரகெதிக்கு யிடமுமாகும்
பாச்சியே யெட்டினுட பொருளையெல்லாம்
பாங்கான மனதுவைத்துப் போத்துவாயே. 8

போத்தப்பா வைப்புக்கு அஞ்சுலட்சம்
புகழான யெட்டெழுத்தும் புகட்டிநாவில்
வாத்தப்பா குளிகைக்குப் பத்துலட்சம்
வாகான வாதத்துக் கெட்டுலட்சம்
சாத்தப்பா மவுனத்துக் கொன்றேலட்சம்
சதாகோடி சாபத்துக் கதுவேயாகும்
ஏத்தப்பா பச்சிலைகள் சாபத்துக்கும்
எய்தியதோர் பீடைக்கோர் லட்சமாமே. 9

ஆமப்பா துலாத்திலொரு விநாடிதாழ்ந்தால்
அப்பனே ஓராண்டு யீராண்டாகும்

ஓச்சப்பா கன்னியென்ற ராசியோர்க்கு
உத்தமனே யிக்குறியும் உண்டானாக்கால்
ஏச்சப்பா ரெண்டாண்டு நாலாண்டாகும்
எய்தியதோர் வேதையிவ்வளவேயாகும்
மூச்சப்பா உங்கிலியுங் கிலியுஞ்சவ்வும்
மூட்டுவாய் பாதாள முருவுந்தானே. 10

உருவான கெந்திக்குச் சரியேசூதம்
உத்தமனே மூன்றெழுத்தஞ் செழுத்துங்கூட்டிக்
குருவான ஆதியென்ற வுப்புங்கூட்டிப்
புகழான யெருக்கலம்பால் விட்டுஆட்டி
எருவான ஐந்தெருவிற் புடத்தைப்போடு
அப்பவல்லோ ஐயிரண்டு காட்சியாச்சு
பருவான திருமந்திர சூஸ்திரந்தான்
பதினெண்பேர் பதம் நினைக்கப் பலிக்குந்தானே. 11

❋❋❋

4. கொங்கணவர் திருமந்திர ஞானம்

'கொக்கென நினைத்தாயோ கொங்கணவா?' என்ற பழமொழி கதையுலகில் மிகவும் பிரபலமானது. கொங்கணவச் சித்தர் ஆழ்ந்த தியானத்தில் இருக்கும் பொழுது மேலே பறந்து சென்ற கொக்கொன்று அவர்மீது எச்சமிட்டு விட்டது. அதனால் தியானம் கலைந்த அவர் அக்கொக்கை கோபத்துடன் பார்த்தார். உடனே அந்த கொக்கு எரிந்து சாம்பலாயிற்று.

நீண்ட காலம் தவத்திலிருந்த கொங்கணவருக்கு கண் விழித்ததன் காரணமாக பசி தோன்றவே ஊருக்குள்

சென்று உணவு வேண்டி நின்றார். திருவள்ளுவரின் வீட்டின் முன் நின்று உணவுக்காக தான் வந்திருக்கும் செய்தியைக் கூறி காத்திருந்தார். அப்பொழுது வாசுகி அம்மையார் பதி சேவையில் ஈடுபட்டிருந்தார். தன் கடமைகளை முடித்துக்கொண்டு உணவு எடுத்து வரத் தாமதம் ஆகிவிட்டது. அதனால் கோபமுற்ற கொங்கணவர் அவ்வரை விழித்துப் பார்த்தார்.

ஆனால், அவர் இதனைச் சட்டை செய்யவில்லை. "என்ன கொங்கணவரே! என்னையும் கொக்கு என்று நினைத்து விட்டீரோ!" என்று ஏளனமாகக் கேட்டார். தான் காட்டில் நிகழ்த்திய செயல் இவ்வம்மைக்கு எப்படித் தெரிந்தது என்று அவரது தவ வலிமை கண்டு வெட்கித் தலைகுனிந்தார்.

'சபித்தாய் நீகொக்கை அன்று
தனிக் கோபம் பெண்ணின் மேலே'

அதன் பிறகு கொங்ணவர் போகரையும், திருமாணிக்கத் தேவரையும் வணங்கிக் குருஞானம் பெற்றார். பிறகு திருவேங்கட மலை சென்று தவம் செய்தார். அப்போது வரவேந்திரன் என்னும் சிற்றரசன் கொங்கணரைத் தரிசித்து அவரது சீடனாக ஆனான். கொங்கணரும் அவனுக்கு பலப்பல ஞான அநுபவங்களை உபதேசித்தார். அவற்றுள் இந்தத் திருமந்திர ஞானமும் ஒன்று. அந்தாதி நடையில் அமைந்த இந்தப் பன்னிரண்டு பாடல்களும் மந்திர ஞானத்தை அருளுவன.

கொங்கணர் திருமந்திர ஞானம் 12

மூலத்தே அவ்வுமென்று முன்னேவூணு
முனைகண்டா லங்கென்று பின்னேவூணு

காலத்தே பளிச்சென்றாற் சிங்கென்றானு
கைமுறைதான் மூன்றுவகை காணுங்காணும்
தாளத்தே மின்னலுட னொளிபோற்காணும்
தயங்காதே மனமுள்ளே சாரவூணு
ஆலத்தே வுண்டசிவன் முக்கண்போல
அடங்காத தீபவொளி யழுத்திப்பாரே. 1

அழுத்தியங்கே பளிச்செனப் பேரண்டத்தூது
அப்பனே தித்தித்தால் சத்தியாச்சு
வழுத்தியங்கே கும்பகமாம் முனைகோணாது
வாயங்கே மவுனமா மாயைபோகும்
கொழுத்தியங்கே சமைப்பதற்கு தீயும் வேண்டாம்
கூரான சிகாரத்தையூது பத்தும்
சுழுத்தியங்கே நெடும்பாதை யோடியாடச்
சொல்லார்களிம் முறையைச் சூட்டிப்பாரே. 2

சூட்டியங்கே பார்ப்பதற்கு வகையைக்கேளு
சொல்லுகிறேன் பேய்மக்காள் சும்மாவல்ல
ஆட்டியங்கே யிடகலையிற் பூரித்தப்பா
அடைவாக மூலத்தே நினைவாய்க்கும்பி
நீட்டியங்கே பிங்கலையி னுள்ளேரேசி
தேராக மெள்ளமெள்ள யேத்திவாநீ
பூட்டியங்கே உரைத்தாக்கால் நாடிசுத்தி
புகழான வாதபித்தம் வாய்வுபோமே. 3

போமப்பா மூன்றுவகை நோயும்வெந்து
புகழான காயமுந்தா னிருகும்மெத்த
வேமப்பா நல்வினைதீ வினையும்நீறாம்
விதமான வைம்புலனும் விரைந்துபோகும்
ஓமப்பா ஓங்காரம் நாதமேலே
ஒருகோடி ரவிபோல ஓங்குமோங்கும்

ஆமப்பா இப்படியே கண்டேன்கண்டேன்
அப்பனே நீங்களுமிப் படிதான்பாரே. 4

பார்க்கையிலே அவ்வென்றா லுவ்வும் கூடும்
பரவியதோர் மகாரத்திற் சேருங்காலம்
ஏர்க்கையிலே உகாரமாய் மேலேயேறும்
யிதுகாணும் பிரசார விந்தைமார்க்கம்
ஆர்க்கையிலே பளிச்சென்று நந்திகாணும்
அப்பனே யிதினோடே வாசிசேரும்
சேர்க்கையிலே அகாரமுடன் மகாரத்தோடு
சிறக்கவே.வாசிரண்டும் நாதவிந்தே. 5

நாதமும்விந் தெனவேவா சிக்குப்பேரு
நலம்பெரிய ரவிமதியு மதற்குப்பேரு
வாதமென்றுஞ் சித்தியென்று மதற்குப்பேரு
மருவியதோர் சிவசத்தி யதற்குப்பேரு
போதமென்று மனமென்று மதற்குப்பேரு
பூமியென்றும் விண்ணென்று மதற்குப்பேரு
ஆதியென்றும் அந்தமென்று மதற்குப்பேரு
அருளொளியாய் நின்றதிது ரெண்டுந்தானே. 6

நின்றறன வெழுத்திரண்டு மொன்றாய்க்கூட்ட
நிலையில்லை கலையில்லை நேசமில்லை
ஒன்றான மனமில்லை யொன்றுமில்லை
ஓகோகோ தாழ்வில்லை யுயரமில்லை
கன்றான வெளியில்லை ஒளியுமில்லை
காண்பதுவுங் காணாது மிரண்டுமில்லை
மண்ணான முதற்கொண்டு விண்ணுமில்லை
மாசியில்லை தேசியில்லை மதித்திலேனே. 7

மதியத்து நிதியத்து மனமுமத்து
மருவியதோர் யோகமத்து ஞானமத்து
கொதியத்து கூச்சமத்து லெச்சையத்து
கூடுவதுங் கூடாது மிரண்டுமத்து
பதியத்து போதமத்து பறப்புமத்து
பாழ்வெளிக்குள் முடிவத்துப் பார்ப்பதத்து
உதியத்து ஒடுக்கமத்து வொன்றாய்நின்ற
உத்தமனே யொருபொருளை யுணர்ந்திலேனே. 8

உணர்வத்து அறிவத்து பொறியுமத்து
ஒன்றென்ற சொல்லத்து ஒன்றுமத்து
புணர்வத்து கெற்பமத்து காய்பூவத்து
பதிந்துநின்ற உயரத்துப் பறப்புமத்து
சுணர்வத்து சூழமத்து ஜோதியத்து
சுத்தவெளிக் காடுமத்து அலியுமத்து
எணர்வத்த தேதோதான் யானும்காணேன்
யென்மக்காள் ரிஷிகள்சித்த ரியம்பினாரே. 9

இயம்பரிதாம் பூரணத்தி லடுத்தால்ஞானம்
யிதுக்குமக்காள் கரையில்லை லக்கமில்லை
இயம்பரிதாம் போதமென்பா ரதுவேதென்றால்
யெம்மட்டோ கண்மட்டுக் கெய்தாதென்பார்
இயம்பரிதாம் நிறந்தரந்தா னென்பார்வல்லோர்
என்னவென்றா லென்னமோ யென்பாரய்யோ
இயம்பரிதாம் நிர்மலத்தைக் கண்காண்பாரோ
யேதுபோ பேச்சல்ல வென்றுசொல்லே. 10

சொல்லான சத்தியப்பா யுப்புக்கொப்பும்
சொற்பெரிய யீசனப்பா பூரம்பூரம்
வல்லான துருசியப்பா மாயைமாயை
மருவியதோர் காரமப்பா யீசனீசன்

கல்லான சத்தியப்பா சாரம்சாரம்
கடியதொரு சூடனப்பா யீசனீசன்
வல்லான ரெண்டினங்கள் வாசியாச்சு
மக்களே சிவசத்தி சுண்ணம்பண்ணே. 11

பண்ணியதோ ரிரண்டுசுண்ண மொன்றாய்க்கூட்டி
பச்சையிட்டு அறைக்கச்சூ தத்தைக்கொல்லும்
ஒண்ணியதோர் சூதமது ஒண்ணேஒண்ணு
ஓகோகோ நிஷ்களத்தோ டொக்குமொக்கும்
புண்ணியமாந் தேகமொத்த சீஷனானால்
பொருளருளும் கைவசமாய்ப் புகழ்ந்துபாரு
அண்ணியமாய் முன்சொனமித் திரத்துக்கொப்பாய்
அறைந்திட்டேன் வேதாந்த மறைந்திட்டேனே. 12

❄❄❄

5. ஜெய முனிவர் திருமந்திர ஞானம்

ஜெய முனிவர் செய்த திருமந்திர ஞானத்தில் திருமூலரின் திருமந்திர மாலையில் கூறியது போன்றே எண்வகை கன்மங்களின் நிலைப்பாடுகள் கூறப்படுகின்றன. ஒரு சின்ன வித்தியாசம் இதில் வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆகிருஷணம், வித்துவேசனம், மாரணம் என்பவை கணபதியைச் சார்ந்து உருவாக்கப் பட்டுள்ளது. ஆதி கணபதி வசியம், மகா கணபதி மோகனம், நடன கணபதி தம்பனம், சக்தி கணபதி உச்சாடனம், வாலை கணபதி ஆகிருஷணம், உச்சிட்ட கணபதி வித்துவேசனம், உக்கிர கணபதி மாரணம், மூல கணபதி பேதனம் என்று மந்திர வகைக் கூறி அஷ்ட

கணபதி வணக்கத்துடன் முடிக்கப்படுகிறது. 37 பாடல்களும் திருமந்திரச் சுருக்கமாக இங்கு பாடல் வடிவில் தரப்படுகின்றது.

ஜெய முனிவர் திருமந்திரம் 37

ஆதியிலே பரப்பிரம மொன்றதாகி
அதிலிருந்தே சகலஜெந்துக் குயிர்தானாகும்
சோதிதனைக் காண்பதென்றா லெளிதோவல்ல
சுத்தசித்தத் துடன்பார்த்தா லறியலாகும்
சேதியல்ல பலகோடிக் கொருவனுண்டு
தெளிந்துமனம் விரியாமல் நிலைநிறுத்திப்
பேதியா திருந்துசுழி முனையின்சூட்சம்
பேரறிவாற் கண்டறிந்தாற் சித்திதானே.

சித்திபெற வேண்டுமென்றால் விகற்பகற்பம்
சிந்தையினிற் கோபமொடு குரோதமோகம்
பத்தியதோர் கொலைகளவு மதமாங்காரம்
பாதகமா மென்றசெய லனைத்தும்போக்கி
நத்திடுவாய் நற்செய்கை யுள்ளதெல்லாம்
நானிலத்துன் பொருளெனவே கொள்ளைகொள்ளு
வெத்திபெற விற்பனர்கள் சொன்னநூலை
மேவிப்பார் மற்றதைநீ பார்த்தால்வீணே. 1

வீணப்பா வேதமென்றும் சாஸ்திரமென்றும்
விளம்பினார் வயிற்றுபிழைக்க மெய்மைபோலக்
காணப்பா அவைமுற்றும் உலகத்தோர்கள்
கையாண்டு மெய்சலித்து மாண்டுபோனார்
பூணப்பா அவர்களைப்போல் நீயாகாமற்
பூரணத்தை நாடிநிற்பாய் புகலக்கேளு

தோணப்பா வென்றறியா மடையரெல்லாம்
சோதிநிலை கண்டறிந்தோன் போலப்பேச்சே. 2

பேச்சப்பா பேசிமாந் தரைமயக்கிப்
பேராசை கொண்டுநாய் போற்றிரிந்து
ஆச்சப்பா ஆச்சரிய மையன்கூத்தை
ஆகாகா வென்றெங்கும் பல்லைக்காட்டி
வீச்சப்பா வீச்செனப் பணம்பறித்து
விருதாவாய்த் திரிவானே கள்ளஞானி
மாச்சப்பா அவர்களைநீ சேர்த்திடாதே
மகத்தானே நிலையைக்கண் டப்பாநில்லே. 3

அப்பனே ஆதிநிலை யறிவதென்றால்
அரிதரிது கண்டிடுவான் வினையன்றானும்
தப்பிதமீ தல்லபலாக் கனிபழுத்துத்
தான்கனியும் ரசம்போல மனங்கனிந்து
ஒப்புயர்வாம் பருவமதில் விதைவிதைத்து
உத்தமனே வளர்த்திடுவாய் பயிரைநன்றாய்க்
கொப்புகவ ரிலைபூபிஞ் சாகுமுன்னே
கொடுமையுள்ள வேடர்வெட் டிடுவார்பாரே. 4

பாத்திடுவா ய்வர்களுக்கு அஞ்சிடாமற்
பரமகுரு தனைமனதிற் றினையுஞ்செய்து
சேர்த்திடுவாய் சேனைகளா தாறமாகச்
சேர்த்திடவே வேடரஞ்சி யோடுவார்கள்
பூர்த்தியடா நினதுசெய்கை நாட்டம்பாரு
பூண்டிடுவாய் நித்தனென்ற பூடணத்தை
நேர்த்தியடா நின்பெருமை சொல்லப்போமோ
நினைவொன்றித் தெரிவதென்ன வென்றாற்கேளே. 5

கேளடா தாய்தந்தை கூடும்போது
கெற்பத்தி லுருவான தெந்தவஸ்து
நாளடா நீயறிந்து தொழுதுநில்லு
நலமில்லா மூடருக்குத் தோணாதப்பா
தாளடா காணுதல்கோ டிக்கொருத்தன்
தன்மனத்தி னாலல்லோ தெரியவேணும்
வேளடா வேளவனை நீக்கவேணும்
மேன்மைபெற மனம்விட்டால் மோசம்போச்சே. 6

போச்சப்பா முந்தினதோர் குருக்களெங்கே
போறாடுஞ் சாதியென்ற குலந்தானெங்கே
நீச்சப்பா நானென்ற சடலமெங்கே
நினைவான நினைவுங்க டழிந்ததெங்கே
பேச்சப்பா அடங்கிநின்ற விடந்தானெங்கே
பிதற்றுவார் மாயையென வறியாமற்றான்
கூச்சப்பா கூச்சலிட வுயிர்போமுந்தன்
கூட்டோடே போச்சோசொல் மூச்சுந்தானே. 7

சொல்லப்பா அடங்குமிட மாருங்காணார்
சோதிநிலை யறிந்தவனே காண்பான்காண்பான்
நில்லப்பா அண்டத்துச் சியிலேசென்று
நித்தியா னந்தசுக வதீதந்தன்னிற்
செல்லப்பா பலவினைக ளெல்லாம்நீங்கும்
செகசோதி யுன்றனக்கே தோணும்தோணும்
அல்லப்பா வொன்றுமில்லை யறிவுதானும்
ஆதியந்த மில்லாநற் சோதிகாணே. 8

காணவே இன்னமொரு வசியஞ்சொல்வேன்
கணபதியின் வசியமடா கண்டுதேறு
தோணவே பதினெண்க ணேசனென்று
சொன்னாலும் அதிற்சிறந்த திந்தமார்க்கம்

பூணவே நீயிதனைத் தியானம்பண்ணு
    பூதலத்தி லிதைமறந்தாற் புகழுண்டாமோ
பேணவே ஓர்நினைவாய் நின்றுகொண்டு
    பிசகாமல் மந்திரத்தைச் செய்யுகந்தே. 9

ஆதி கணபதி வசியம்

உகந்தெளிய வசீகரத்தின் சூட்சங்கேளு
    உத்தமனே வடதிசையை நோக்கிமைந்தா
அகந்தெளிய விபூதியுத் தளமாய்ப்பூசி
    ஆனகலை யாசனமே லிருந்துகொண்டு
முகந்தெளிந்த ருத்ராட்ச மணியைவாங்கி
    முத்திபெற ஆதிகண பதியைநன்றாய்ச்
செகந்தெளியச் செபிப்பதற்கு மந்திரத்தைச்
    செப்புகிறேன் சிவ-ஓம்-ரீங்-அங்-கென்றோதே. 10

ஓதவா யிரத்தெண்ணூ றுருவேசெய்தால்
    உண்மையென்ற ஆதிகண பதிதான்மைந்தா
நீதமா யுன்னிடத்தில் நின்றுகொண்டு
    நீநினைத்த காரியங்கள் வசியஞ்செய்வார்
வேதமாம் புராணமொடு சாஸ்திரங்கள்
    விளங்கிநின்ற மந்திரங்கள் வசியமென்று
சாதகமா யுந்தனுக்குத் தெரியச்சொன்னேன்
    தன்னிலையிற் றானிருந்து செய்யலாமே. 11

ஆரப்பா தேவரொடு முனிவர்தானும்
    அடங்காத பிசாசுமுதற் சத்துருக்கள்
ஓமப்பா மிருகமுதல் அஷ்டநாகம்
    ஒடுங்காத பட்சிமுதற் சகலமெல்லாம்
தாமப்பா ஆதிகண பதியின்சூட்சம்
    தன்மையுடன் தியானித்துத் தானேநின்றால்

காமப்பால் கானற்பால் வசியமாகிக்
கருணையுடன் சகலமுமே வசியங்காணே. 12

மகாகணபதி மோகனம்

காணவே வசீகரத்தின் மூலஞ்சொன்னேன்
கணக்கான மோகனத்தின் கருணைகேளு
பேணவே கீழ்திசையை நோக்கிமைந்தா
பிரணவத்தால் விபூதியையுத் தளமாய்ப்பூசித்
தோணவே வெண்புலியா சனமேற்கொண்டு
சுத்தமென்ற துளசிமணி கையில்வாங்கிப்
பூணவே செபிப்பதற்கு மந்திரத்தைப்
புகலமகா கணபதியின் சூட்சந்தானே. 13

தானென்ற சூட்சமது சொல்லக்கேளு
சங்கையுடன் ஓம்-கிலி-சிங்-கென்றேதான்
வானென்ற குருபதியில் நின்றுகொண்டு
மார்க்கமா யிரத்தொண்ணூ றுருவேசெய்தால்
கோனென்ற விக்கினேச் சுரன்றான்மைந்தா
குருவான இருதயத்திற் பிரகாசிப்பான்
ஊனென்ற இருதயத்திற் பிரகாசித்தால்
உத்தமனே சர்வமோ கனமாம்பாரே. 14

பாரப்பா ரிஷிமுனிவ ரருளாலேதான்
பகருகிறேன் கணபதியின் தியானத்தாலே
காரப்பா கடிவிஷங்கள் சகலநோயும்
கண்டவுடன் பறந்தோடிப் போகும்பாரு
நேரப்பா மிருகமுதற் பட்சியெல்லாம்
நிறைவுட னுந்தனையுங் கண்டால்மைந்தா
வீரப்பா வொடுங்குமோ கன்மேயாகும்
வேதமஹா கணபதியின் விஞ்சையாச்சே. 15

நடனகணபதி தம்பனம்

ஆச்சப்பா மோகனத்தின் அருமைசொன்னேன்
அரகரா தம்பனத்தின் பெருமைபாரு
காச்சப்பா மேல்திசையை நோக்கிமைந்தா
கருணையுடன் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
பேச்சப்பா தானிருத்தி மவுனமாகப்
பெருமையாந் தெற்பையா சனமேற்கொண்டு
மூச்சப்பா யிருத்தித்தா மரைப்பூதன்னில்
முற்றுமணி யாற்செபிக்கும் முறைமைகேளே. 16

கேளப்பா நடனகண பதியின்சூட்சம்
கிருபையுடன் ஓம்-ஸ்ரீயும் கிலி-யென்றேதான்
வாளப்பா தானிருத்தி மைந்தாகேளு
மகிமையா யிரத்தொண்ணூ றுருவேசெய்தால்
வேளப்பா நடனகண பதிதான்மைந்தா
மேன்மைபெற தியத்தில் நடனஞ்செய்து
சூளப்பா உன்னிடத்தி லிருந்துகொண்டு
சுத்தமுடன் தம்பனத்துக் கருள்செய்வாறே. 17

வாறான தம்பனந்தா னென்னவென்றால்
மகத்தான துஷ்டரொடு மிருகமெல்லாம்
நீறான உன்னுடைய சமுகங்கண்டால்
நேர்மையான தொடுங்கித்தம் பனமேயாவார்
பேறான வாய்வுடனே நெருப்புத்தண்ணீர்
பிரளாமற் றம்பிக்கும் பெருமைபாரு
கூறான நடனகண பதியினாலே
கூர்மையுடன் சகலமுந்தம் பனமாம்பாரே. 18

சத்திகணபதி உச்சாடனம்

பாரப்பா தம்பனத்தைச் சொன்னேன்மைந்தா
பதிவாமுச் சாடனத்தைச் சொல்லக்கேளு

நேரப்பா தென்திசையை நோக்கிமைந்தா
நேர்மையாய் விபூதியையுத் தளமாய்ப்பூசி
காரப்பா கலைமானா சனமேற்கொண்டு
கருணைபெறச் சங்குமணி கையில்வாங்கிச்
சாரப்பா சத்திகண பதியின்கூட்சம்
தன்மையுடன் ஓம்-கிலியும் சவ்வென்றெண்ணே. 19

எண்ணியா யிரத்தெண்ணூ றுருவேசெய்ய
ஏகாந்தச் சத்திகண பதியினாலே
உண்ணியுச்சா டனமுந்தான் மைந்தாமைந்தா
உறுதியுடன் சித்திமய மாகும்பாரு
நண்ணியுச்சா டனமுந்தான் சித்தியானால்
நானிலத்தில் ஞானியடா சொல்லக்கேளு
நுண்ணிமையாய்க் கண்டதெல்லா முச்சாடிக்கும்
நோக்குமனக் கண்ணதினாற் றன்னைப்பாரே. 20

பாரப்பா ரவிதனிலே யிருந்துகொண்டு
பத்தியுடன் சிவயோகந் துதிக்கும்போது
வீரப்பா பலவிதமாய்க் கொண்டநோய்கள்
விஷமுடன் பில்லிசூ னியங்களெல்லாம்
நேரப்பா உனைக்கண்டாற் காணாதோடும்
நீடுலகிற் சகலவித்து மாடலாகும்
தேரப்பா சத்திகண பதியினாலே
தீர்க்கமுச்சா டனமுந்தான் சித்தியாமே. 21

வாலைகணபதி ஆகிருஷணம்

சித்தியுடன் நானுமுச் சாடனத்தைச் சொன்னேன்
தீர்க்கமுள ஆகிருஷ ணத்தைக்கேளு
முத்தியுடன் வடகிழக்கு முகமிருந்து
மோனமுடன் விபூதியுமுத் தளமாய்ப்பூசி

பத்தியுடன் பட்டுவஸ் திரமேற்கொண்டு
பதிவாகப் படிகமணி கையில்வாங்கிப்
புத்தியுடன் வாலைகண பதியின்சூட்சம்
பூரணமாய் ஓம்றீயுங் கிலியென்றோதே. 22

ஓதிடவா யிரத்தெண்ணூ றுருவேசெய்தால்
உத்தமமா கிருஷணந்தா னுறுதியாகும்
நீதிடமா கிருஷணந்தான் சித்தியானால்
நினைத்தபடி நின்றுவிளை யாடும்பாரு
சோதியென்றே நின்றுவிளை யாடுதற்குச்
சொல்லுகிறேன் வாலைகண பதியினாலே
ஆதியென்ற வினைகளெல்லா மகன்றுபோகும்
அடங்காத வினைகளெல்லா மகலும்பாரே. 23

பாரான பார்தனிலே அஷ்டகர்மம்
பத்தியுடன் செய்துவிளை யாடும்போது
வீரான மாந்தருட கருமமெல்லாம்
விட்டகன்று போகுமடா விண்ணைநோக்கும்
நேரான நிலையுமனக் கண்ணால்நீயும்
நேர்மையுடன் குருபதியில் நின்றாயாகில்
பேரான வாலைகண பதியினாலே
பெருமையா கிருஷணத்தைப் பேணிப்பாரே. 24

உச்சிட்டகணபதி வித்துவேசனம்

பாரடா கிருஷணத்தைச் சொன்னேன்மைந்தா
பதிவாம்வித் வேசனத்தைப் பகரக்கேளு
காரடா தென்மேற்கு முகமிருந்து
கருணையாய் விபூதிமுத் தளமாய்ப்பூசி
சாரடா வெள்ளைவஸ் திரமேற்கொண்டு
சங்கையுள்ள பவளமணி கையில்வாங்கி

நேரடா உச்சிட்ட முன்னோன்சூட்சம்
நேர்மையுடன் சொல்லுகிறேன் நினைவாய்க்காணே. 25

காணவே ஓம்ஸ்ரீயும் கிரியுமென்று
கருணையா யிரத்தெண்ணூ றுருவேசெய்தால்
பூணவே வித்துவே சனந்தான்மைந்தா
பூரணமாய்ப் பூதலத்திற் சித்தியானால்
தோணவே நின்றுவிளை யாடுஞ்செய்தி
சொல்லவித்து வேசனத்தைத் தியானஞ்செய்து
பேணவே பெண்களுக்குக் கடாட்சித்தாக்கால்
பெருமையுள்ள திருநீற்றாற் கெற்பமாமே. 26

கெற்பமென்ன உற்பனந்தான் சித்தியாகும்
கிருபையா யுன்கரத்தா லெதானாலும்
உற்பனமா யுன்கரந்தொட் டீய்ந்தால்மைந்தா
ஒன்றுபத்தாய்த் தான்வளரும் உண்மைஉண்மை
விற்பனமும் விவேகமுட னிருந்துகொண்டு
வேதாந்த சற்குருவைத் தியானம்பண்ணி
அற்புதவுச் சிட்டகண பதியைப்போற்ற
அடுத்திருந்தோர் காரியமுஞ் சித்தியாமே. 27

உக்கிர கணபதி மாரணம்

சித்தியுடன் வித்துவே சனத்தைச்சொன்னேன்
தீர்க்கமினி மாரணத்தைச் செப்பக்கேளு
பத்தியுடன் தென்கிழக்கு முகமிருந்து
பாலகனே விபூதியுத் தளமாய்ப்பூசி
வெத்தியுடன் வேங்கையா சனமேற்கொண்டு
வேகமா மெட்டிமணி கையில்வாங்கி
மூத்தியுட னுக்கிரண பதியின்சூட்சம்
மூர்க்கமாய் ஓம்றீயும் நசியென்றென்னே. 28

என்னப்பா ஆயிரத்தெண் ணூறுருத்தான்
இணக்கமாய்ச் செய்திடவே என்னசொல்வேன்
நன்னப்பா மாரணந்தான் சித்தியானால்
நாடுமுன்னே சகலபிணி மாண்டுபோகும்
இன்னப்பா எதிர்த்தசத் துருவின்பேரை
எடுத்தெழுதித் தியானமதா யுருச்செபித்தால்
முன்னப்பா குண்ணியவன்நோயதாவான்
மூர்க்கமுடன் மாரணத்தை யோதியூதே. 29

ஓதியதோர் நாழிகையில் மைந்தாகேளு
உரதமதி லக்கினிதா னுடனேபாய்ந்து
வீதியென்ற தெருத்தோறும் அலைவான்மட்டை
விஞ்சையென்ற மாரணத்தை நெஞ்சுள்வைத்து
நீதியுடன் விபூதியைநீ கடாட்சித்தாக்கால்
நேர்மையுடன் சகலபிணி மாண்டுபோகும்
சோதியென்ற உக்ரகண பதியின்சூட்சம்
சுத்தமுடன் மாரணத்துக் குயிருமாச்சே. 30

ஆச்சப்பா மாணரத்தைச் சொன்னேன்மைந்தா
அரகரா பேதனத்தை யருளக்கேளு
காச்சப்பா வடமேற்கு முகமாய்க்கொண்டு
கருணையுடன் விபூதியுமுத் தளமாய்ப்பூசி
மூச்சப்பா தானிருத்திக் குருவைப்போற்றி
முத்திபெற வேகிருஷ்ணா சலமேற்கொண்டு
பாச்சப்பா மூலகண பதியின்சூட்சம்
பத்தியுடன் ஓம்றீங்ஆம் மெவேயெண்ணே. 31

எண்ணடா மிளகுமணி தன்னால்மைந்தா
இன்பாயி ரத்தெண்ணூ றுருவேசெய்தால்
உண்ணடா பேதனந்தா னுறுதியாகும்
உத்தமனே அதினுடைய சித்துகேளு

கண்ணடா அறிந்துபே தனத்தையோது
கருத்துடனே சிவயோகத் திருக்கும்போது
நண்ணடா உந்தனுட சொரூபந்தானும்
நாட்டமுடன் விதவிதமாய்த் தோணும்பாரே. 32

பாரப்பா பாரதனிற் பகரக்கேளு
பத்தியுடன் பேதனத்தைத் தியானம்பண்ணி
நேரப்பாநின்றபிணி யாளருக்கு
நீவிபூ தியுமெடுத்துக் கொடுத்தாயானால்
சாரப்பா சுரதோஷம் வீக்கமெல்லாம்
க்ஷணத்திலே பேதிக்கும் விருதுபோடு
தேரப்பா மூலகண பதியினாலே
தீர்க்கமுடன் பேதனந்தான் செம்மையாமே. 33

அஷ்ட கணபதி

செம்மையதாம் அஷ்டகர்ம மெட்டுக்குந்தான்
தீர்க்கமா யஷ்டகண பதியின்சூட்சம்
இம்மையதாய்ச் சொன்னடா நயந்துபாரு
எல்லோர்க்கு மிந்தவழி கிட்டாதப்பா
கொம்மையதா யஷ்டதிசைக் கரசாய்நின்று
கொண்டுவினை யாடுதற்கு இதுவேசூட்சம்
தம்மையதாய்க் காணுவது சாட்சியாகத்
தானிருந்து அஷ்டகர்மந் தான்தானாமே. 34

ஆமப்பா அஷ்டதிசைக் கரசாய்நின்று
அருமையுள்ள சித்துவிளை யாடப்பாரு
ஓமப்பா ஆதிகண பதிதானொன்று
உறுதியாம் மகாகண பதிதானொன்று
தாமப்பா நடனகண பதிதானொன்று
சங்கையுள்ள சத்திகண பதிதானொன்று

நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
நன்மையுள்ள வாலகண பதிதானொன்றே. 35

ஒன்றாமுச் சிட்டகண பதிதானொன்று
உத்தமனே உக்ரகண பதிதானொன்று
நன்றான மூலகண பதிதானொன்று
நாட்டமுட னஷ்டகண பதிக்குமொன்றாய்க்
குன்றாத மூலமந்திர சூட்சந்தன்னைக்
குறிப்புடனே சொல்லுகிறேன் சுவர்ந்துகேளு
நின்றாடும் மூலமடா ஆதிமூலம்
நிலையறிந்து ஓம்–கிலி அங்–உங்–கென்னே. 36

என்னமோ சொன்னேனென் றெண்ணவேண்டாம்
இகத்துக்கும் பரத்துக்கும் இதுவேமேன்மை
முன்னமோ சிலமுனிவர் மொழிந்தமார்க்கம்
முறைகள்பல விருந்தாலு மிதனுக்கீடோ
பின்னமொன்றும் வாராது செய்துபாரு
பிராமணர்க்கும் அசூதிப்ர தேசிகட்கும்
அன்னமொடு அறுசுவைபா லமுதுளிப்பாள்
அதனாலே அருளுண்டா மறிந்துபாரே. 37

6. திருமூலர் திருமந்திரமாலை

திருமூலனுடைய உடலிற் புகுமுன், சுந்தரநாதர் தம் இயற்பெயருடன் விளங்குங் காலத்தில் செய்த இத் திருமந்திரமாலைக்கு அகச்சான்றாக இந்நூலின் சிறப் பாயிரச் செய்யுளான 'மந்திரங் கொண்டு வழிபடு வோர்க்குச் சுந்தரநாதன் சொல்லிய மந்திரம்' என்ற வரிகளைச் சான்றாகக் கூறுவர்.

திருமூலராகிய சிவயோகியர் தாம் கயிலையிலிருந்து வரும்பொழுதே 'மந்திரமாலிகா' என்ற ஒரு வடமொழி நூலைக் கொண்டு வந்து தமிழில் மொழி பெயர் தாரென்றும், அதுவே 'திருமந்திரமாலை முந்நூறு' என்பதாகும் என்றும் ஒருகருத்து நிலவுகிறது.

தமிழில் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத்தின் வடமொழி பெயர்ப்புதான் 'உபமன்யு பக்த விலாசம்' என்பது. அதில் திருமூலர் வரலாற்றைக் கூறு மிடத்து அவர் எழுதிய திருமந்திரமலையை ஸ்ரீமந்த்ர மாலிகா என வடமொழி மரபிற்கேற்ப மொழி பெயர்த் துள்ளனரேயன்றி, திருமூலர் வடமொழியில் அந்நூலை எழுதினார் என்று கூறியதில்லை. அதுமட்டு மன்றி அப் பெயரிய நூல்கள் எதுவுமில்லை என்பதுவும் திண்ணம்.

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தி யினுள்ளே புகப்பெய்து போற்றி செய்து
அந்தி மதிபுனை அரனடி நாள் தோறும்
சிந்தை செய்தாகமஞ் செப்பலுற்றேனே

என்ற திருமூலரின் வாக்கிற்கேற்ப இத்திருமந்திரமாலை திருமூலரால் தமிழில் செய்யப்பட்ட தென்பதும் மூல மந்திரம் மட்டும் வடமொழியில் யாக்கப்பட்டது என்பதும் பன்னிரு திருமுறை வரலாற்றில் அறிஞர் க. வெள்ளை வாரணத்தால் நிறுவப்பட்டது.

முதல் தந்திரம்

பாயிரம்

மங்கல வாழ்த்து

விநாயகர் காப்பு

1. ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை

நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில்வைத்தடி போற்றுகின் றேனே

மூலமந்திரம்

2. ககராதி ஓரைந்துங் காணிய பொன்மை
அகராதி ஓரா றரத்தமே போலும்
சகராதி ஓர்நான்குந் தான்சுத்த வெண்மை
ககராதி மூவித்தை காமிய முத்தியே

நூல் நுதல் பொருள்

3. முடித்தவிம் மந்திரம் மூலம தாகும்
அடுத்தவி லக்கமும் அக்கரந் தானும்
அடுத்திடு வீசம் அறைபதி னாறும்
எடுத்திடுங் கருமம் இனிசொல்லு வோமே

4. சொல்லுந் திசையுந் துணைக்காவல் தெய்வமும்
நல்லதோர் வீசமும் நாடும் இலக்கமும்
சொல்லுங் கிரியையுஞ் சூழுமந் திரமும்
வல்லவர்க் கிவற்றை வாத்துவந் தானே

5. வாத்துவந் தன்னை வகுத்தவிம் மந்திரம்
பாத்திடும் எட்டுக் கருமம் பகர்ந்தது
ஏத்திடுந் தெய்வமும் எண்ணிய நூல்களும்
கூத்தன் உரைத்தது கூறுகின்றேனே

மந்திர யந்திர வியல்

அதிகாரம் - 2

எண் வினை ஏவல் இயந்திரம்

இயந்திரம் வரையும் முறை

6. கூறுகின் றேனறை கூறுங் குறியது
கீறுகீன் றேனஞ்சு மேலஞ்சு கீற்றது

தேறுகின் றேன்தெளி யும்பதி னாறறை
கூறுகின் றேனிது கொண்டது தானே

7. கொண்ட கீற்றஞ்சுங் குறுகியகீற் றஞ்சும்
விண்டதோ ரொவ்வொன்றுக் கொவ்வொன்று விஞ்சாமற்
கண்டதாங் கூத்தன் கலையென் றுரைத்தது
எண்டிசைக் கன்மத் திடும்பெயர் தானே.

எண்வகை வினைகளின் பெயர்

8. இடும்பெயர் வசியம் மோகனந் தம்பம்
அடும் பெயர் உச்சா டனமா கருணை
இடும் பெயர் ஏடணை பேதம் மாரணம்
தொடும் பெயர் கருமத்திற் சொல்லிய எட்டே.

எண்வகைக் கரும இயந்திரம்
(பொது)

9. சொல்லிய எட்டுக்குந் தோன்றுந் துருவமும்
நல்லறை எட்டினில் நாடும் இலக்கமும்
நல்ல பதினா றறைமுதல் நாலினிற்
சொல்லும் பகவத தோன்ற விட்டதே.

இதுவுமது

10. இட்டபதி னாறில் எட்டாந் துருவமும்
பட்ட விலக்கம் பதித்திடும் எட்டினில்
தொட்ட துருவம் தொடர்ந்தொன்றோ டெட்டாக
கட்டும் அடைவுக்கு காரணம் ஆமே.

எண்வகைக் கன்மங்களின் பெயரும் முறைமையும்

11. காரண வசியங் காண்பது மோகனந்
தாரண தம்பனந் தாங்குமுச் சாடனங்

காரண மாகுங் கருணைவித் தேடனை
வாரண பேதம் மாரண மறியே.

இயந்திரத்தின் இயல்பு

12. அறிகின்ற அக்கர சக்கரந் தன்னைக்
குறிகொண் டிருந்திடுங் கோல்வளை தானும்
உறுகின்ற வீசத்தோ டொத்த விலக்கந்
தூறுகின்ற சூத்திரஞ் சொல்வரை பாரே.

அதிகாரம் - 3

எண்வினைத் துருவம்

1. வசியத் துருவம்

13. வரைபார் கிரிதீர் திரிகீர் பரிவார்
உரையார் வசியத் தோதுந் துருவமே
பிரிவீர் தருகார் கருதார் விரைபீர்
சொருகா விலக்கத்தைத் தோன்றவைப் பீரே.

2. மோகனத் துருவம்

14. பீர்விர தார்கரி கார்தரு வீர்பிரிந்
தேர்பெறு மோகனத் தெய்துந் துருவமாம்
வார்பரி கீர்திரை தீர்கிரி பார்வரை
பேர்பெறு லக்கம் பேசத் தருவனே.

3. தம்பனத் துருவம்

15. தருகார் பிரிவீர் விரைபீர் கருதார்
சொருகீர் வருதம் பனைக்குத் துருவம்
கிரிதீர் வரைபார் பரிவார் திரிகீர்
நிரையா விலக்கத்தை நீர்வரை கீரே.

4. உச்சாடனத் துருவம்

16. கீர்திரை வார்பரி பார்வரை தீர்கிரி
ஒருமுச் சாடனத் தோதுந் துருவமாம்
தார்கரி பீர்விரை வீர்பிரி கார்தரு
ஒரும் இலக்கம் உடன்கரு தாரே.

5. ஆகருடணத் துருவம்

17. கருதார் விரைபீர் பிரிவீர் தருகார்
தெரியா கருணைக்குச் சேருந் துருவம்
திரிகீர் பரிவார் வரைபார் கிரிதீர்
மருவா விலக்கம் வகுத்துவைத் தீரே.

6. வித்து வேடணைத் துருவம்

18. தீர்கிரி பார்வரை வார்பரி கீர்திரை
ஒரும்வித் தேடணைக் கோதுந் துருவமாம்
கார்தரு வீர்பிரி பீர்விரை தார்கரி
சீர்பெற லக்கஞ் சேரப் பிரிவதே.

7. பேதனத் துருவம்

19. பரிவார் திரிகீர் திரிதீர் வரைபார்
பெரியோர் துருவத்தைப் பேதனம் என்பர்
விரைபீர் கருதார் தருகார் பிரிவீர்
அரிதா மிலக்கத்தை அறிந்திடு வீரே.

8. மாரணத் துருவம்

20. வீர்பிரி கார்தரு தார்கரி பீர்வரை
மாரண கன்மம் வகுத்த துருவமாம்
பார்வரை தீர்கிரி கீர்திரை வார்பரி
சேரும் இலக்கஞ் சேர்த்துப் பரிவுறே.

அதிகாரம் 4

எண்ணும் எழுத்தும் - இலக்கம் அடைக்கும் முறை

21. பரிவுறும் எட்டுத் துருவம் பதித்துக்
கருவுறும் எட்டிற் கருமத் திலக்கம்
நெறியுறப் பாதிசெய் தொவ்வொன்று நீக்கு
அறியுற அன்பத் தொன்றாகும் அகாரமே.

துருவ அறை எட்டு

22. அகாரமாம் ஒன்றில் இகாரமா மிரண்டில்
உகாரமாம் மூன்றில் ருகாரமாம் நான்கில்
லுகாரமாம் ஐந்தில் எகாரமாம் ஆறில்
ஒகாரமாம் ஏழில் ஒழிந்தஐ எட்டிலே

அத்துருவ அறை எட்டு

23. எட்டிலக் கவறை ஆமுதல் ஒளவீறாக்
கட்டுங் கலைபதி னாறுங் கருத்தொக்க
ஒட்டுந் துருவத்தில் ஒருநான்கு கவ்வும்
நட்டுஞ் சகாரநால் ஙஞ்ஞவ் விலக்கே.

24. இலக்கத்துட் டந்நால் ணகாரந் தந்நாலும்
நலக்கு மிறுதியில் நந்நிற்க மீண்டும்
சொலப்பதி னாறத் துருவம தெட்டில்
இலக்கும் க்ஷகாரம் முதலவ் விறுதியே,

25. இறுதியாம் அத்துரு வத்து ரம்முதல்
உறுவது நவ்வந்தம் ஓதிய விட்டு
பெறுதியில் அம்முதல் பேசும்க்ஷவ் வீறாய்
அறிவ தெழுத்தைம்பத் தொன்றுமங் கானதே

26. ஆனது ஙவ்வுங் ககார விறுதியில்
ஆனது ஞவ்வுஞ் சகார விறுதியில்
ஆனது ணவ்வுந் டகார விறுதியில்
போனசுன் மூன்றும் பொருளெழுத் தாமே.

அதிகாரம் 5

இயந்திர மந்திர பீசங்கள்

27. ஆதியாய் நின்ற அறையின் இலக்கத்தைச்
சோதியாய் நின்றதோர் சத்தியாற் சூழ்ந்திட்டு
ஏதமாய் நின்ற எழுத்துக்கள் தானெல்லாம்
வேதமாய் நின்ற விந்து கொடுப்பதே.

28. கொடுப்ப தறைநடுக் கோணமா றாக
எடுத்தவக் கோண நடுவே கிலீ யென்
றெடுத்த கிலீயை ரீங்காரத் தாற்கட்டி
தடுத்தறு கோணங்கள் காமபீ சம்மிடே.

29. இடுவ துருவத் தரவென்று சொல்லி
இடுவ திலக்கத் தரியென் றிசைய
இடுவ தசபை துருவத்தில் நிற்க
இடுவசோ கங்கென் றிலக்கத் தினிலிடே.

அமர்ந்த அரகர வாம்புற வட்டம்
அமர்ந்த அரிகரி யாகுமுள் வட்டம்
அமர்ந்த அசபை யாமத னுள்வட்டம்
அமர்ந்த விரேகையும் ஆகின்ற சூலமே

30. இட்ட துருவத் திசைசங்க பற்பமும்
பட்ட இலக்கத் திற்பாசாங் குசங்களும்
நட்ட நடுவறை நாலும் புவனையாம்
கட்டங் கலப்பை சுவத்திகம் ஆமே.

"மேவிய சக்கர மீது வலத்திலே
கோவை அடைவே குரோம் சிரோம் என்றிட்டுத்
தாவில்ரீங் காரத்தாற் சக்கரஞ் சூழ்ந்து
பூவைப் புவனா பதியைப் பின் பூசியே"*

31. ஆகும் அறையெல்லாம் அமைந்த வக்கரம்
போகுந் துருவத்தில் தும்புரு பீசமும்
ஏகும் இலக்கத் திசைந்தசிந் தாமணி
ஆகுஞ் சத்தியெண் சித்தியாய் நிற்குமே

32. நிற்கும் இலக்க நடுவே சுற்றெழுத்து
நிற்கும் வலத்தர நேர்பெற் றிடத்தரி
நிற்குந் துருவத்தை நீகட்டு ரீங்காரம்
நிற்கும் இலக்கஞ் சிறீயென்று கட்டே.

"சட்கோணந் தன்னில் ஸ்ரீம்ஹ்ரீம் தானிட்டு
அக்கோண மாறின் தலையில்ரீங் காரமிட்டு
எக்கோண முஞ்சூழ எழில்வட்டம் இட்டுப்பின்
மிக்கீரெட் டக்கர மம்முதன் மேலிடே"

33. கட்டுவ தன்முன் கருமத்தின் மந்திரம்
இட்டபின் சத்திய தொன்றே இடுமறை
இட்ட விரேகைத் தலைதொறுஞ் சூலமாம்
ஒட்டிய சத்தியிட் டொவ்வால் சூழ்வதே

34. சூழ்ந்த இடைவெளி சோடச கலை நிற்கும்
சூழ்ந்த பெயருங் கருமமுஞ் சுற்றிடும்
சூழ்ந்த வரம்பதன் மேலே சிரீயென்று
தாழ்ந்த விருபால் சத்தியை வைப்பதே.

35. வைத்தபின் இத்தை வளைப்பது சத்தியால்
ஒத்த வியந்திரம் எல்லாம் உடலாகப்
பத்தி படக்கட்டிப் பக்கம் இரண்டிலும்
சித்தி ரம்மதி யிரவி சேருமே.

"மேவிய சக்கர மீது வலத்திலே
கோவை யடைவே குரோங் சிரோங் கென்றிட்டுத்
தாவில்ரீங் காரத்தாற் சக்கரஞ் சூழ்ந்து
பூவைப் புவனா பதியைப்பின் பூசியே" [1]

36. சேரும் பிரணவம் யந்திரத்தைச் சூழப்
பேரும் இதன்மேற் பெரியதொரு வட்டம்
ஆரும் இரண்டு பிரணவத் திடையே
சாருந் துவாரத் தவமு ரைப்பதே.

மகார நடுவே வளைந்திடுஞ் சத்தியை
ஓகாரம் வளைத்திட் டும்பிளந் தேற்றி
யகாரந் தலையா யிருகண் சிகாரமாய்
நகார வகாரநற் காலது நாடுமே [2]

சத்தியர் எண்மர்

37. உரைத்த பிராமி ஓது மகேசுரி
வரைக்கவு மாரி வந்த வயிணவி
இரைத்த வராகி இசையிந் திராணி
வரைத்தரு சாமுண்டி மாயிலக் குமியே

கணபதியாதி நால்வரும் எண்திசைப் பாலரும்

38. இலக்கிந் திரனங்கி யங்கே யமனும்
வலக்கு நிருதி வருணனும் வாயுச்

சிலைக்குஞ் சசியீசன் சேருங் கணேசன்
மலைக்கின்ற கந்தன் வயிரவன் துர்கையே.

அஷ்ட கஜம்

39. துற்றயி ராவதஞ் சொற்புண்ட ரீகமும்
அற்புத வாமனுங் குமுதனும் அஞ்சன்
பற்பதந் தன்னொடு சாருவ பூமனும்
சொற்படச் சுப்ர தீபன்சொல் லானையே.

அட்டமா நாகம்

40. ஆனை யனந்தன் அறிவா சுகிதக்கன்
ஊனமில் கார்க்கோடன் உக்கிரமா பற்மன்
ஏனைய பற்மன் சங்கபா லன்குளிகன்
மாநகம் யோனி அறியுங் கொடியே.

அஷ்டயோனி, ஒன்பான் கோள்கள்

41. கொடிபுகை சிங்கம் நாய் கொண்டஎருது
மடிகழுதை யானை மாபெருங் காகம்
சுடர்சோமன் செவ்வாய் துலங்கும் புதனும்
வெடிகுரு வெள்ளி சனி ராகு கேதுவே.

இராசிகள்

42. கேதுடன் ஆனது கோள்கள் இராசியும்
மேடம் எருது மிதுனங் கடகமும்
காதிய சிங்கமும் கன்னிதுலாந் தேள்வில்
கோதில் மகரங் குடமும் மீனமே.

நாள்கள்

43. மீனென் றுரைக்குநாள் மிக்கிருபத் தேழும்
தானு முமைதிருச் சாரதி பூமியும்

ஞான குருவொடு கேத்திரன் நான்முகன்
வானைப் பொருந்து கருடன்வல் லூரே.

பஞ்ச பட்சிகள்

44. வல்லூறு வாந்தை கொடி கோழி மாமயில்
பல்லோ ரறிபஞ்ச பட்சியென் றானது
சொல்லா யினித்தேவர் சூழும் பெருந்திக்கு
வல்லோர் வகுத்த வழியுரைப் பேனே.

தேவர்களின் திசைகள்

45. உரைப்பது திக்குப் பாலர்கன் னியானை
பருத்தபாம் பியோனி பகரும் கோள்களும்
பொருத்த முறப்பூ ருவந்தொட் டடைவே
தரித்தவ ரவர்கள்தம் பீசங்கள் தானே.

பன்னிரு இராசிகளின் திசைகள்

46. தான்கிடா யேறு தனியே கிழக்கங்கி
தேன்பிறழ் தண்டாகுந் தென்கரி கடகம்
வான்கனி தென்மேற்கு வைத்த வருணன்மேல்
ஊன்கொடு தேடுலாம் ஒண்டனு வாயுவே.

ஏனையவர்களின் திசைகள்

47. தனிவட கும்பம் மகரந் தயங்கும்
இனியவீ சாசனம் இலங்கு துணைமீன்
கனியுந்தென் மேற்குக் கணபதி கந்தன்
புனைவாயு மூலைப் பொருவுகேந் திரனே

48. கேத்திரத்தின் ஈசன் கிளரங்கி துர்க்கையும்
சேத்திடும் இந்திரன் வல்லூறு தெற்காந்தை

கோத்திடுங் காகம் வருணன் சசிகோழி
சாத்து நடுமயில் தன்றிக் கடையவே.

49. அடைவிலே தேவர்கள் பீசம் அதனைப்
புடையிலே சூழும் புவனைக்குக் காவல்
சடையிலே கங்கையைத் தாங்கிய ஈசன்
வடிவிலே அக்கரம் வைத்துரைத் தனனே.

அதிகாரம் - 6

அட்சர வடிவம்

50. வைத்துரைத் தான்மதி சூடிய கூத்தனும்
ஒத்த எழுத்தைம்பத் தொன்றும் உடலாகச்
சக்தி திருமேனி சங்கரன் றன்மேனி
அத்தன் மூவெழுத் தாகும் அகாரமே.

51. அகாரத் திருமுடி ஆகாரம் நெற்றி
இகாரம் வலக்கண் ஈகாரம் இடக்கண்
உகாரம் வலச்செவி ஊகாரம் வாமம்
ருகாரம் வலமூக்கு ரூகாரம் வாமமே.

52. வாங்குமில் லுவ்வு வலக்கன்னம் மற்றிடம்
தேங்குமில் லூகாரம் ஏகாரம் மேலிதழ்
தாங்கும்ஐ காரந் தப்பாது கீழிதழில்
ஓங்காரம் மேல்வாய்ப்பல் ஒக்க நிறைத்தே.

53. நிறைந்தது கீழ்வாய்ப்பல் நின்றஔ காரம்
உறைந்ததே அம்மென் றொருதாளக் கூட்டம்
உறைந்த அகவென் றுச்சந் தலையிலே
நிறைந்தகண் டத்தின்மேல் நேர்பதி னாறுமே.

54. ஆறும் வலக்கைக் ககாரம் நால் ஙவ்வைந்தும்
மாறும் இடக்கை சகாரம் நால் ஞவ்வைந்தும்
தேறும் வலக்கால் டகாரம் நால் ணவ்வைந்தும்
கூறும் இடக்கால் தகாரம் நவ் வய்ந்தே

55. அய்ந்நாகு கிருபதெழுத் தானது கைகால்
மெய்யாம் பகாரம் விளங்கும் வலவிலா
வெய்யா துரப்புப்பா வேந்துமிட விலா
பொய்யா பகாரம் போந்த குலையதே.

56. குலையதிற் கீழ்பக் கொண்ட கீழ்வயிறு
நிலையா மகாரமும் நேர்பெற்ற உந்தி
உலையா திலிங்கத்தில் உன்னும் யகரம்
விலையா ரகாரமும் வீசத் திருந்ததே.

57. இருந்தமூ லாதாரத் தெய்தும் லகாரம்
பொருந்த வகாரமும் போய குதத்தில்
வருந்த வலமுலை வாய்த்த சகாரம்
இருந்த சகாரம் இடமுலை தன்னிலே.

58. தன்னும் சகாரம் தடமார் நடுநிற்கும்
துன்னும் அகாரமும் தொண்டைக் குழிதன்னில்
மன்னும் எகாரம் மருவுமே நெற்றியில்
உன்னும் கவ்வென்ற துச்சி யடுத்ததே.

இறைவனும் இறைவியும் யந்திரத்தில் எழுத்துருவாய் இருக்கும் நிலை

59. அடுத்த வியந்திரத் தக்கரமாகி
உடுத்த வுருவுற் றொளிபெற்ற சத்தி

எடுத்த வுருவுற் றிறைவனும் நிற்பன்
அடுத்த கன்மமாதிகள் ஆவதந் கெட்டே.

அதிகாரம் - 7

புவனாபதி சக்கரம்

60. எட்டுத் திசையும் இயல்புடன் நின்றது
சிட்டித் திதியாய்ச் சிறந்தசங் காரமாய்
வட்டத் திருந்த வடிவுள சக்கரங்
கட்டிப் பரனுங் காட்டினன் மாதுக்கே.

61. மாதின் பெயரால் வழங்குமிச் சக்கரம்
சோதி யெழுத்துமெண் சொல்லிற்கன் மாதிகள்
ஓதும் உலகத்தில் ஒவ்வொன்று சாதிக்கும்
மாது புவனை மனதில் வைத் தார்க்கே.

62. வைத்தார் எழுத்தும் வருகின்ற வீசமும்
ஒத்தார் அறிவர் உலகிற்கன் மாதிக்கு
வித்தாகி யுண்ணிற்கும் வெவ்வே றிலக்கங்கள்
இத்தா ரணியில் இடுவ தேற்றதே

இரண்டாம் தந்திரம்

எண்வினை ஏவல் இயக்கவியல்

இடும்பெயர் வசியம் மோகனம் தம்பனம்
ஆடும் பெயர் உச்சா டனம்ஆ கருணை
இடும்பெயர் ஏடனை பேதம் மாரணம்
தொடும்பெயர் கருமத்திற் சொல்லிய எட்டே

எண்வினை ஏவல் இலக்கவியல்

அதிகாரம் - 8 வசிய வினை

அஷ்ட கன்மப் பிரயோக இலக்கம்

வசிய கன்மப் பிரயோக இலக்கம்

1. வசிய கன்மத்தின் வகை

63. ஏற்றது லோக வசியத் திடுலக்கம்
நூற்றஞ் சறுபத்து நாலும் பதினாறும்
நுற்றஞ் சறுபத்து நாலும் இருபதும்
ஏற்ற விராச வசியங் கொண்டதே.

64. கொண்டது மாதர் வசியங் குவலயத்
தெண்பதி னேழும் எழுபதன் பத்தாறும்
எண்பதி னாலும் பதினாறும் நூற்றொன்றும்
புண்பட் டுழலும் புருடர் வசியே.

65. வசியமாஞ் சத்துரு வைத்தநூற் றஞ்சும்
இசையநாற் பத்திரண் டெண்பத் தெட்டாகும்
அசைய விருகம் அன்பத்தஞ் செண்பதும்
ஒசியறு பத்தாறும் ஓதுமந் திரமே.

வசிய கன்மத்தின் மந்திரமு
யந்திரம் தரிக்கும் இடமும்

66. மந்திரம் ஒன்றாம் வசியமோ ராறுக்கும்
தந்த வியந்திரந் தாங்குந் தலைமேலே
தந்த வியந்திரஞ் சத்தி திருமேனி
வந்ததி யானம் வருவது காணே

67. காணுந் திருமேனி செம்மைசெம் பட்டுடை
பூணும் மலரம்பு பொற்கரும்பு விற்கை

காணுந் திசையுங் கதிரெழு பூருவம்
பேணுங் கிரியை இனிப்பேசு வோமே.

68. பேசிய நேரம் உதித்தபின் முற்சாமம்
வீசிய ஓரை வியாழம தாயிடு
மாசை யிராச வசியத்தே ஔகாரம்
ஓசை யுலக வசிப்போங் காரமே

69. ஓங்காரஞ் சத்துரு ஒண்மான் பெண்புருடர்
ஐங்காரங் கூட்டி யியலுநூ றாயிரம்
தேங்காமல் ஓதித் திருந்திய தர்ப்பணம்
பாங்காய்ப் பதினா யிரமது பாரே.

70. பார்க்கும் பிராணப் பதிட்டையும் ஆயிரம்
ஓர்க்குமோர் கன்மத்துக் கோமமும் ஆயிரம்
சேர்க்குந் தியானமுஞ் செம்மைகீழ்த் திக்கது
பார்க்கிது கீறும் படிசாற்று வோமே.

71. சாற்றிய வக்கர சக்கர மேனியை
ஏற்றுக பொன்செம் பெழிற்பட்டு வெள்ளியில்
ஆற்றிய வசியம் ஆறுங் களைந்தபின்
போற்றிய மோகனம் போமா றியம்பே.

அதிகாரம் 9

மோகன கன்மம்

72. இயம்பும் உலகம் எழிற்பெண் புருடர்
தயங்கிய சத்துருத் தாங்கும் விருகம்
வயங்கிய மோகன மைந்து வகைக்கும்
செயம்பட விலக்கந் தெரிந்துரைப் பேனே.

73. உரைப்பேன் உலகர்தம் மோகத் திலக்கம்
நிரைப் பேனெண் பத்தெட்டு நீண்ட வெழுத்
துரைப்பே னூற் றொன்றும் ஒளிபெற நின்ற
புரைப் பூங்குழல் மாதர்க்கு மோகனம் போற்றே.

74. போற்றுமை யைந்தும் புணர்ந்தவைம் பத்தெட்டும்
நூற்றாறு மாகும் நுவலும் புருடர்க்கு
நூற்றேழ்தொண் ணூர்றும் நொய்யவிரு பத்தாறும்
சாற்றா யினிச்சத் துருமோகஞ் சாற்றே

75. சத்துரு மோகனஞ் சாற்றின்முப் பத்திரண்
டொத்த விருபதின்மூன் றோரைம்பத் தெட்டாம்
வைத்த விருகம் வருமோக நாலாறோ
டொத்தமுப் பத்தஞ் சோர்நாற்பத் தெட்டடைவே

76. அடைவிலே மோகனம் ஐந்து வகைக்கும்
புடையிலே மந்திரம் போற்றிய பின்னை
சடையிலே திங்களைத் தாங்கிய வம்மை
வடிவிலே பொன்மை வகுத்த தியானமே.

77. தியானிக்குந் திக்கு நிருதியின் மூலை
தியானிக்கு மந்திரஞ் செப்பி னூறாயிரம்
தியானிக்குந் தர்ப்பணஞ் சேர்பதி னாயிரம்
தியானித்து வைக்குந் திறமிது வாகுமே

78. திறமாகு நேரந் தேர்ந்திரண் டாஞ்சாமம்
உறவாகும் ஓரையும் ஒத்த சனியாம்
பெறுமாம் பிராணப் பிரதிட்டை பண்ணித்
திறமாக வைப்பிடஞ் சேருவது தானே.

79. அதுவாந் திறமையன் ஆனை வலக்காற்
புதையா வியந்திரம் போனது மோகம்
விதியாக வைந்தினில் வேண்டுஞ் சிரத்தும்
பதியாய்க் கருதிப் பகருந்தம் பனமே

அதிகாரம் 10

தம்பன கன்மப் பிரயோகம்

(இந்த அதிகாரம் தம்பன கன்மத்தை பிரயோகம் செய்யும் முறையை உணர்த்துகின்றது)

80. தம்பனஞ் சாற்றில் தலஞ்சலம் அக்கினி
வெம்பின சுக்கிலம் வேறா யுதுங்கட்கம்
கொம்பின சத்துருக் கூறும் விருகமும்
தும்பின தேழ்வகை யாகத் துளங்குமே.

81. துளங்கு நிலத்தும் பனஞ்சொல் வகைதான்
வளர்ந்து மரங்காயா மந்திக்கு நூறும்
விளங்கு மெழுபதும் வேண்டைம்பைத் தொன்பான்
கலைந்துசெக் கெண்ணெய் காணாம லென்னே.

82. என்னுந் தொண்ணூற்றாறும் எய்துநாற் பத்தேழு
முன்னுமைம் பத்திரண்டும் மொய்த்த விலக்கம்
பன்னிய வாலைச்சா றில்லை பதினெட்டுந்
துன்னுநூற் றஞ்சோடு தொண்ணூற்றா றென்றே.

83. என்று தனதா னியமிட்டு வைத்தற்குச்
சென்று தொண்ணூற்றாறுஞ் சேர்ந்தபத் தொன்பதும்
அன்றிப் பதினெட் டாமிலக்கம் நால்வகை
நின்ற நிலத்தம்பம் நேர்பட்ட மந்திரம்.

84. பட்டவிம் மந்திரம் பாரித்த சக்கரம்
கட்டுஞ்செக் காலை கருது மரத்தடி
ஒட்டுந் தனதா னியமொன்றி வகைக்கு
வெட்டுங் குழிதனில் வேண்டிப் புதையே.

85. புதைத்த நிலத்தம்பம் போக்ய பின்னே
விதிக்கும் சலத்தம்பம் வேண்டிய தென்றும்
ஒதுக்கிய உப்புப் படாதோர் நூற்றாறும்
பதிக்கின்ற வேழைஞ்சும் பாயமுப் பத்தெட்டே

86. எட்டிய வெண்பத்தொன் றெய்திய நூற்றெட்டு
முட்டிய நூற்றுநால் முத்துப் படாதிடக்
கட்டு வலைமீன் படாதுதொண் ணூற்றாறும்
இட்டமுப் பத்தெட் டிருபத் தொன்பதே.

87. ஒன்பதிற் றாறும் ஒருநூற்றைஞ் செண்பதும்
பொன்பதிக் காறு கரைபுரண்டு போகா
பின்புற மாமழை பெய்யாதொண் ணூற்றிரண்
டன்புறத் தைம்பத்தஞ் சாறிரண் டாகுமே.

88. ஆகிய தெண்பதும் ஐம்பதும் நூற்றாறும்
ஏகில் இடிவிழா தென்று மரக்கலம்
போகா கடலிற் பொருந்தவெண் பத்தஞ்சும்
பாகாநாற் பத்து நாலும் பதினாறே.

89. ஆறு குளநீர் அலைத்துங் கரைநிற்கக்
கூறிய நூற்றாறுங் கொண்டெழு பத்தைந்தும்
ஏறிய எண்பதும் ஏற்ற விலக்கமாந்
தேறுஞ் சலத்தம்பஞ் சென்றெண் வகையே.

90. வகையொன்றி நின்ற வகுத்த சலத்தில்
தகையொன்றி நின்றவித் தம்பனங் கூறில்
பகையின்றி நின்ற பதினா றறையில்
தொகையின்றி நின்றதோர் மந்திரஞ் சொல்வதே.

91. சொல்லிய மந்திரந் தோன்ற வரைந்தபின்
நல்ல வியந்திரம் நாடியே வைப்பிடம்
புல்லும் வலையில் மீனும் புகாதொழியச்
செல்லுந் துறையிற் சேர்ந்துப்பு முத்துக்கே.

92. முத்துஞ் சொரிமழை முட்டைய னானைக்கால்
எத்துங் குளநடு வேன்றகரை யாற்றில்
வைத்தங் குறுத்து மரக்கல மாமுடி
ஒத்த விடிசிரத் தோங்கெந் திரமே.

93. இயந்திரந் தன்னை யெழில்பெற வைத்துப்
பயன்கொள்வ தென்று பரமனுஞ் சொன்னான்
தயங்கிய சுக்கிலத் தம்பனந் தன்னை
இயம்புவ னிந்த விலக்கத் தடைவையே.

94. அடைந்தது சுக்கிலம் ஐம்பத்தி னாலுந்
தொடர்ந்த வறுபதுந் தொண்ணூற்று மூன்று
மிடைந்தவள் கர்ப்பம் வீழாது தரிக்க
நடந்திரு பத்தேழு நாலெட்டு நாற்பதே.

95. நாற்பதும் நாற்பத் திரண்டெழு பத்தேழும்
பெற்றிடும் பிள்ளை பிறந்து மரியாமல்
ஏற்பது தொண் ணூறும் எண்பதும் பன்னேழும்
சேர்ப்பது மாதர் தெருளா திருக்கவே.

96. இருக்க முலையெழா தேன்ற வறுபான்
தருக்கு மெழுபதுந் தாங்கெண்பத் தேழுஞ்
சுருக்க முறவைத்துஞ் சுக்கிலத் தம்பம்
நிரக்குமொரு மந்திரம் நீயறி வாயே.

97. அறிந்த வியந்திர மாக்கு மடைவுஞ்
செறிந்த சிரமது சேர்க்க விலக்கம்
பிறிந்தவச் சுக்கிலம் பெற்றிழப் பாட்கு
நிறைந்தவக் கர்ப்பம் நிறுத்தத் தரிப்பதே.

98. தரிப்பது மாசாத்தான் யானை யிடக்கால்
பெருத்த முலையுடன் பெண் தெரு ளாமல்
பொருத்த முறுநாட் பூசை பலியிட்டுச்
செருச்செயு மைங்காயஞ் சேர்த்துப் புதைப்பதோ

99. புதைக்கின்ற சுக்கிலம் போயனல் தம்பம்
விதிக்கின்ற மாமமு வேந்ததொண் ணூறும்
பதிக்கும் பதினெட்டும் பார்முப்பத் தொன்றும்
கொதிக்கும் உலைதனிற் குறுகா திரும்பே.

100. இரும்புவே காதே இடு முப்பத் தாறும்
பொருந்தவெண் ணாறும் புகனாற்பத் தைந்தும்
வருந்திய முப்பதும் மன்னுநூற் றொன்றுஞ்
சொரிந்ததொண் ணூற்றாறுஞ் சொன்மனை வேகாதே.

101. வேகாமல் அக்கினியும் வென்று தம்பிக்கச்
சாகா வகை மூன்றுஞ் சாதிக்க சொற்படி
பாகா மறைபதி னாறிற் பதிப்பது
போகா மந்திரம் போற்றி யிடுவதே

102. இடுவது யந்திரம் எவ்விடம் வைத்துத்
தொடுவது கையிற் சுடர்மழு வேந்த
இடுவது வேகா திரும்புக் குலையில்
அடுவது வீட்டினில் ஆக்கிவைப் பாகுமே.

103. வைப்பாகு மக்கினித் தம்பம் வருந்தாமல்
தப்பாமல் ஆயுதந் தம்பிக்கு மாறுகேள்
அப்போது வெட்டில் அறாதறு பத்தாறும்
முப்பதின் மூன்றும் முதலறு நான்கே.

104. நான்கெட்டும் முப்பதும் நல்ல பதினஞ்சும்
ஊன்பட் டெலும்பில் உறையாது குத்தெலாம்
தான்பட்ட வம்புகள் தையாவ றுபதுஞ்
சூன்பட் டிருபதுஞ் சொல்லை பேத் தொன்றேம்.

105. ஒன்று மரமறா தோங்கெழு பத்தாறும்
சென்ற விருபதுஞ் சேரிரு பத்தாறும்
அன்றி யைம்பத்தே ழாகுநாற் பத்திரண்டும்
நின்ற வெழுபான் நேருங் கிடாய்வெட்டே.

106. வெட்டுங் கிடாயுடன் வேறா யுதத் தம்பனம்
பட்டது பாரிற் பரந்து வகையஞ்சாய்
இட்ட இலக்கம் எழில்பெற நின்றபின்
கட்டு மந்திரங் காண்ப தறையிலே.

107. அறையிலே மந்திரம் ஆக்கிய பின்னை
இறைதனை வைக்கும் இருப்பிடம் சொல்லில்
நின்றதலை தான்வெட்டு நேரம்பு குத்து
வெறிபடக் கையினில் வேண்டிப் பிடர்கிடாய்.

108. கிடாயு மரமுங் கிளத்துகை வெட்டுப்
படாது மணலிற் பதித்துடன் தூவி
அடாநின்ற வாயுதத் தம்ப மவைப்போய்ப்
படாநின்ற சத்துருத் தம்பம் பாடுவதே

சத்துருத் தம்பன கன்மப் பிரயோகம்

109. பாடுவ தேவது பகைநா வடங்கத்
தேடுவ தைம்பதுஞ் சேர்ந்தவைம் பத்தெட்டுங்
கூடுமைம் பத்தேழுங் கொண்டவிவ் விலக்கம்
ஆடுங் குரோதம் அடங்க உறுமே.

110. உறுவது நூற்றிரண் டோர்பதி னேழுஞ்
செறிவது முப்பத் திரண்டுஞ்செல் பாதம்
முறிவது முன்னம் நடவா திருக்க
அறுபதும் நாலாறும் ஐம்பத்தஞ் சாகுமே.

111. அஞ்சாமற் சத்துரு ஆயுதந் தையாமல்
அஞ்சாறும் நாற்பத்தே ழறபத் திரண்டும்
எஞ்சா தெழுதாமற் கைகுறை யாறாறும்
நஞ்சேநாற் பத்தேழ் நாடு மெழுபதே.

112. எழுபதும் முப்பத்தஞ் செண்ணான்கு மிட்டாற்
பழுதறு பாட்டு மிடறுந்தம் பிக்கும்
எழுபத்தஞ் செண்ப திருபத்து நாலுங்
குழுவத்துக் கூத்துங் குறுகா துடன்றானே.

113. உட்னைம்பத் தெட்டும் ஒரெழுபத் தொன்றும்
தடைமுப்பத் தாறுஞ் சரக்கு விலைபோகா
படை தச்சர் பண்ணார் பதினே முடனே
இடை நின் றிருபத்தா றெய்திடும் நூற்றாறே.

114. நூற்றாறு முப்பத்தி னாலும் பதினேழுங்
கூற்றாகச் சித்திரங் கொட்டக்கை வாராது
ஏற்றா ரெழுபத்தஞ் செண்பத்தா றெட்டெட்டும்
கூற்றார் குயவர் வனையார் கொள்கலமே.

115. கலமாய சத்துருத் தம்பத்திற் கண்ட
பலமாம் வகையும் பதினொன்றே யாகும்
வலமாகக் கொண்ட வரைபதி னாறில்
நலமாக மந்திரம் நாட்டுவதொன் றாமே.

116. நாட்டிய தொன்றை நடுப்பட வைத்தபின்
தீட்டிய வாக்குக் குரோதஞ் சிரத்தினிற்
காட்டிய காலுங் கையா யுதமொழிய
ஈட்டுவ தையன் இடக்காலில் வைக்கவே.

117. வைக்கும் பட்டடை வார்குயவர் தச்சர்க்கு
விற்குஞ் சரக்கிற்கு வேண்டுங் கடையினில்
ஒக்கவிசை பாடார் கொட்டார் உடனாடார்
சிக்கெனக் கையிற் சேரப் பிடிக்கவே.

118. பிடிக்கும் விருகங்கள் பேராமற் றம்பம்
கொடுக்கும் வகைக்குத்தான் கூறுமிலக்கம்
எடுக்கும் புலிவாய்க் கிருபதெண் பத்தேழ்
அடுக்குமிரு பத்திரண் டாமிலக் கம்மே.

119. இலக்குமி யானை எதிர்வரா தோடத்
தொலைந்த தொண் ணூற்றைஞ்சுத் தோன்றிய வெண்பான்
நிலைக்குநூற் றாறும் நீடெலிவாய்க் காவல்
தொலைக்கு மிருபதுந் தொண்ணூறு மேழஞ்சே

120. ஏழுஞ் சறுபத் திரண்டுமுப் பத்தெட்டுஞ்
சூழுங் கிடாய்கள் தொடர்ந்தோடிப் பாயாமல்
ஏழேழ் அன்ப திருபத்து நாலிலக்கம்
பேழ்வாய் பாம்பு பின்கடியா தாடாவே.

121. ஆடா நரிவாய்க் கமைந்தவைம் பத்தஞ்சும்
ஈடா மிருபத் திரண்டெண்பத் தெட்டாகும்
நாடாப் பதினைஞ் சிருபதும் நாலாறும்
கூடாமல் நாய்வாய் குறுகா பரிதாமே.

122. பரிகளும் ஓடா பதினே முடனே
தெரிவது நாற்பான் தேர்ந்தறு பத்தெட்டும்
எருதும் பசுவும் மேல்விழா திருக்க
ஒருவும் எழுபதுநூற் றொன்றும் நாற்பதே.

123. நற்பதி னாலும் நணுகிய வெண்பதும்
பாற்பதி னேழும் பன்றிவரா வாய்க்காவல்
ஏற்கும் பதினொன் றெழில்விருகத் தம்பனம்
போர்ப்பதோர் மந்திரம் போற்ற வெண்ணிடே.

124. எண்ணிய மந்திரம் இட்டபின் சக்கரம்
பண்ணிப் பதிக்கும் படியை யறிவிப்பின்
எண்ணிப் புலிபன்றி யானை யெழிற்கிடாய்
திண்ணின்ற பாம்புஞ் சிரத்திற் றரியே.

125. தரிக்கும் புனங்களிற் றன்மூலை நாலும்
நரிக்கும் எலிக்கும் நடுவதங் காகும்
பரிக்கும்பாம் பாடா பரியானை யோடா
பெருத்தவிச் சக்கரம் பின்மந் திரங்கொள்ளே.

126. கொள்ளுமிம் மந்திரங் கோட்டிய தம்பனம்
ஒள்ளும் வகையேழுக் கோர்புறம் பதனில்
தள்ளியுண் ணின்று தயங்குந் தியானமும்
உள்ளம்பெற் றங்கே யொளிபெறு மாறே.

127. ஒளிபெறு சத்தி யொளிநிறம் பச்சை
தெளிவது மேற்கென்னுந் திக்கது தன்னிற்
களிபெறு நேரமுங் காண் மூன்றாஞ் சாமம்
ஒளிபெறும் ஓரையும் ஒண்சனி யாகுமே.

128. சனியாகும் ஓரை அமைந்த விச் சத்திக்
கினிதாக வேற்று முருநூ றாயிரம்
புனைதர்ப் பணமோமம் போம்பத் தாயிரம்
நினைவாம் பிரதிட்டையும் நீகரு தாயே.

129. கருதவல் லார்க்குக் கலந்தோங்கு சத்தி
பெருகிய வன்போடு பேணி யளிக்குந்
திருவுரு வாகித் திகழும் ஒளியை
ஒருபொருளாக உணர்ந்திங்கு நோக்கியே.

130. நோக்கிய தம்பனம் நூலால் எழுவகை
தாக்கித் தொகையேற்றில் தானாற்பத் தேழ்வகை
நீக்கிய பின்னைத் நிறைந்தவுச் சாடனம்
ஆக்கிய தவ்வழி யாரறி வாரே.

அதிகாரம் 11

உச்சாடனக் கன்மம்

131. வாருமுச் சாடனம் வந்த வகைசொல்லில்
தேரும்பேய் தெய்வ மிராசா வியாதியும்

ஓரும் உலகம் ஒருபெண் புருடருஞ்
சாரும் விருகநீர் சத்துரெண் வகையே.

132. எண்வகை யாக இயம்புமுச் சாடணம்
பண்ணுற நின்ற படியி னிலக்கத்தை
மண்ணுற வேற்றி வகுத்த தியானமுந்
துண்ணெனத் தெய்வவுச் சாடனஞ் சொல்லே.

133. சொல்லுமைம் பத்தொன்றுஞ் சேர்ந்த பதினாறும்
அல்லதோ ரைம்பதும் ஆயிடில் ஐயன்போம்
நல்ல பிடாரிபோம் நாடில் அறுபதுஞ்
சொல்லைம்பத் தேழுந் தொடர்ந்தவேழ் பத்தே.

134. எழுபத்தெட் டெண்பத்தேழ் எய்துநூற் றாறுந்
தழுவிற் பறக்குந் தான்பிர்ம்ம ராக்கதன்
எழுமே இருபதும் ஏழேழும் எண்பான்
முழுதற்றுப் போகும் முயலகன் றானுமே.

135. தானேழ் பத்திரண்டுந் தாக்கிய தொண்ணூறும்
ஆனதொண் ணூற்றஞ் சாங்குமர கண்டன்போம்
கூனும் பசாசு குறட்பேய்க் கறுபதும்
ஆனநூற் றேழும் அன்பத் திரண்டாமே.

136. திரண்ட விலக்கங்கள் சேர் பதினாறின்
மருண்டார் தலைதனில் வைத்தவப் போதே
அருண்டுடைந் தோடும் ஐயன் பிடாரிபேய்
வெருண்டோடு மந்திரம் வேண்டிற்று நாடிலே.

137. நாடிய மந்திரம் நல்லதோர் தெய்வத்துக்
காடிய தாறு வகையா யமர்ந்தது

தேடிய வரசவுச் சாடனஞ் செப்பில்
ஆடிய வஞ்சு வகையா யமர்ந்ததே.

138. அமர்ந்தவைம் பத்தஞ்சு மாம்பதி னாறும்
அமர்ந்ததொண் ணூற்றிரண் டாமர சன்போம்
அமர்ந்த பதிவிட்டுப் போமுப்பத் தாறுஞ்
சுமந்தமுப் பத்தேழுந் தொண்ணூற் றிரண்டுமே.

139. இரட்டித்த வைம்பது மெண்தொண் ணூற்றைந்து
மருட்கெட் டறுப தைசுவரி யம்போந்
திரட்டும் பெருஞ்சேனை சிந்தநூற் றாறுந்
தெருட்டிப் பதின்மூன்றுஞ் சேர்த்த வறுபதே

140. அறுபது தேர்பரி யானை கருவி
துறுமநூற் றிரண்டுந் தொண்ணூற்று மூன்றும்
அறுபதா மிலக்கம் ஐந்தே அரசர்
பெறுவதோர் மந்திரம் பேசுவோ மியாமே.

141. பேசிய மந்திரம் பெற்றவிச் சக்கரம்
பூசியைங் காயம் புதையையன் கோயிலில்
ஓசை யுறவே உலகவுச் சாடனம்
வாசி யிடையே வந்து பிறந்ததே.

142. பிறந்த வழிநடை பேசெண்பத் தஞ்சுஞ்
சிறந்தவைம் பத்தெட்டுஞ் சேர்முப்பத் தாறும்
அறிந்தன்பத் தேழ்நாற்பத் தெட்டறுபத்தா
றெறிந்த கிலேசம் இடர்போம் உரைப்பதே.

143. உரைப்பெண் ணான்கறுபத் தொன்றேழ்பத் தாறும்
நிரைப்பின் மோகம்போம் நின்ற பயம்போக

உரைத்ததொண் ணூறும் நூற்றஞ்சும் நாற்பதும்
பெருத்த வினைபோகப் பேசும் இலக்கமே.

144. இலக்கம் பதினஞ் செழுபா னறுபான்
புலக்கும் விலங்குதளை போந்தொண் ணூறும்
இலைத்தொரு நூற்றஞ்சும் எண்பத் திரண்டுங்
கலைக்குளிடு மந்திரங் கண்டிட ஓதே.

145. ஓதிய மந்திரம் ஒக்க வரைந்தபின்
ஆதி யுலகவுச் சாடனம் ஆறுக்குஞ்
சேதித்து வைக்குஞ் சிரத்திலிச் சக்கரம்
வேதிக் கும்பின் வியாதியுச் சாடனம்

146. உச்சா டனஞ்சூலை போகவோ ரெண்ணான்கும்
அச்சா மறுபத்தொன் றன்பத்து நாலுமாம்
பிச்சோட நாலாறும் பேரெழு பத்தேழும்
அச்சோ வறுபத்தெட் டாமென்று சொல்லே.

147. சொன்ன வசூரிபோந் தோன்றுமுப் பத்தாறும்
அன்ன வெழுபத்தஞ் சன்பத் திரண்டுமாம்
உன்னும் உளைப்புப்போம் ஓரைம்பத் தொன்றுடன்
முன்னன்பத் தாறும் முதன்முப்பத் தாறே.

148. ஆறெட்டுத் தொண்ணூ றமர்ந்தமுப் பத்திரண்
டாறிக் கழலை அடைய வுடைந்துபோம்
ஆறு தறுபத்தே ழைம்பத்தா றையெட்டும்
வீறா வகுக்கில் விப்புருதி தீருமே.

149. தீருமன் பத்தாறுந் திகழுநூற் றெட்டும்
ஏருந்தொண் ணூற்றேழும் இட்டகால் வாதம் போம்

போருந்தொண் ணூற்றஞ்சும் பெற்றமுப் பத்தெட்டுங்
கூரெண்பத் தாறுங் கொள்குரல் ஆகாதே.

150. ஆகாகுன் மம்போம் அமைந்தவைம் பத்தேழும்
ஏகாத நாற்பத் திரண்டெழுபத் தெட்டும்
போகாத பித்தம் பொடிபடவைம் பத்தேழ்
தோகாய் நூற்றெட்டுந் தொண் ணூறுந் தொடரவே.

151. தொடர்மித்த ரோகம்போந் தொண்ணூற்று மூன்றும்
படரைம்பத் தாறும் பற்று நூற் றிரண்டும்
இடர்பட் டெழுபத்தொன் றெய்து நூற்றாறும்
பிடர்பட்ட நாலாறும் பித்தபாண் டுவுக்கே.

152. உக்கரித்த பித்தம் ஒருந்தொண் ணூற்றாறும்
மிக்கவிரு பத்தஞ்சும் மேலைம்பத் தாறுந்
தொக்கதோ ரிளைபோந் தொண்ணூறுந்
தொண்ணூற்றேழ்
ஒக்கவொரு நூற்றிரண் டோடே இடுவதே.

153. இடுவது முப்பத்தஞ் சேழாறெண் ணான்குங்
கடிய கயம்போங் கருநீர் அழிவும்
விடுமேதொண் ணூற்றாறும் வேண்டெண்பத் தாறுங்
கடவாத நூற்றஞ்சுங் கல்லெரிப்புச் செப்பே.

154. செப்பியநூற் றொன்றுஞ் சேர்ந்தமுப் பத்தாறும்
முப்பத்தெட் டாகும் மொழியு முடம் பெரிப்புத்
தப்பா நூற்றிருபத் தொன்றுந் தலையாக
ஒப்பாக நூறுமோர் நாற்பத்தெட் டொன்றியதே.

155. ஒன்றிய நூற்றுநா லோடேயெண் பத்தாறும்
வென்ற பதினேழும் வெப்புப்போம் நான்மாறல்

என்ற வெழுபத்தஞ் சென்பத்தி னாலோடு
நின்றநூற் றாறும் நிற்கும் மிலக்கமே.

156. இலக்கம் பதினே ழீண்டெழுப தெண்பான்
குலைப்பொழி கூறுஞ் செவிநோய் தவிர
வலக்குநாற் பத்தே ழாறைஞ்சும் பதினாறும்
முலைக்குத்துப் போக விலக்க மொழிவதே.

157. மொழியும் பதினாறும் முன்னூற் றிரண்டும்
ஒழியும் பதினெட்டும் ஓர்தொழு நோய்போம்
எழுபதும் ஆறாறும் எண்பத்து மூன்றும்
எழுபதுந் தொண்ணூறும் எழேழுங் கண்ணோய்க்கே.

158. நோய்தரு பல்லரணை பற்குத்து நூற்றைஞ்
சாயறி யெண்பத் திரண்டும் பதினெட்டுந்
தோயுமோர் நூற்றிரண்டுந் தொண்ணூற் றொன்பதுங்
காய்கருங் குட்டஞ் செங்குட்டங் காணாதே.

159. காணா திருபத்தேழ் கண்டெண்ப தொண்ணான்கும்
வாணா ளறுமே வைசூரி குருமூச்சில்
நாணா வொருதலை நோய் நாற்பான் முப்பத்தேழ்
பேணாதெண் ணான்கும் பேழ்வயிற்று நோய்க்கே.

160. வயிற்றுநோய் போக வழங்கன்பத் தெட்டும்
பயிற்றிய வன்பதும் பார்நாற்பத் தஞ்சும்
வியற்பட வேண்டுச் சாடனம் வியாதிக்
கியற்றிய மந்திரம் இட்டினிச் சூழ்ந்திடே.

161. சூழ்ந்தது மந்திரஞ் சொன்ன வியாதிகள்
போழ்ந்தது மெண்ணிடப் போற்றிய முப்பதாம்
வீழ்ந்த வியாதியுச் சாடனம் இதனை
வாழ்ந்த சிரத்தில் வரைந்து பதியே.

162. பதிப்பது மாதருச் சாடனந் தொண்ணூறும்
விதிப்பது நூற்றேழும் வேண்டிய வெண்பான்
துதிப்பதைம் பத்தெட்டுந் தொண்ணூறு மையைஞ்
செதிக்கும் புருடர்க் கேற்றதோர் மந்திரமே.

163. ஒருமந் திரந்தன்னை ஒக்கவுள் ளிட்டுத்
திருவினற் றாய்பேர் திகழ்தகப் பன்பேர்
வருமிச் சக்கர வட்டம் வரையப்
புரியொன் றகத்திலே புதைத்திடு பின்னே.

164. புதைத்தபின் சத்துருப் போமுச் சாடனம்
பதிக்கும் பதினெட்டும் பற்றன்பத் தாறும்
நதிக்கும்நாற் பத்தேழும் நாடு பதிபோம்
பதிக்கும் பதினே ழுறுபதா றாறுமே.

165. ஆறாய சேனை யறிசத் துருவோட
கூறாவெண் பத்தஞ்சுங் கொண்டதோர் நூற்றாறுந்
தாறே யறுபதாந் தனதா னியம்போம்
ஆறேழு நூற்றொன் றைம்பத் திரண்டுமே.

166. திரண்டெண்பத் தொன்றுந் தேர்முப்ப தைம்பதும்
வெருண்டிட்டுச் செல்வம்போம் வேறாகுஞ் சீறி
முரண்கெட்டு மூவேழ் நூற்றுநான் கோடைம்பான்
இரண்டிட் டிருந்தமனை யேகுவ தாமே

167. ஏகுவதென் பத்தஞ் செண்ணான்கைம் பத்தாறும்
போகுங்கை யாயுதம் பொன்னேதொண் ணூற்றெட்டும்
ஆகுந்தொண் ணூற்றேழும் ஆறா றமர்ந்திடு
மேகு முறுமனை வெண்கல மனைத்தே.

168. அனைத்துநூற் றாறும் ஆமறுபத் தைந்தும்
நினைத்தநாற் பத்தாறும் நின்ற விலக்கம்
நனைத்தெண்பத் தெட்டும் நகைநாற்பத் தேழும்
முனைத்தமுப் பத்தாறும் முன்சுகம் போகவே.

169. சுகம்போக நின்ற தொகையுடன் பத்தாம்
சுகந்தா னறியச் சத்துருச் சாடனம்
வகுத்தானங் கூத்தன் வகை பத்தினுக்கும்
உகந்தா னறியவொரு மந்திரம் ஓதே.

170. ஓதிய மந்திரம் உள்ளே வரைந்தபின்
வேதகஞ் செய்யும் விதியை விளம்புவன்
போதக மாகப் புதையையன் கோவிலில்
வீதியில் சந்தியில் வீட்டில் இடவே.

171. இடம தறிந்தங் கியந்திரந் தன்னைக்
கொடியவைங் காயங் கௌப்பூசி வைக்க
சடிதியில் ஓடுஞ் சலத்துச் சாடனம்
படிதனி லின்றியான் பகர்வது தானே.

172. பகர்வது நூற்றாறும் பாங் கைம்பத் தெட்டும்
முகைமுப்பத் தஞ்சுக்கு முன்னேறிப் போகும்
பகருமே யாறு கரைக்கறு பத்தாறும்
புகருமே யையஞ்சு மைம்பதும் போற்றவே.

173. போற்றிய வைம்பதும் பொங்கறு பத்தேழும்
ஏற்றிய வெண்பதும் ஏன்றிட முத்தும்போம்
காற்றின் மரக்கலம் ஓடக்கடல் தன்னில்
நூற்றஞ்சும் நூற்றெட்டும் நூற்றுத்தொண் ணூற்றாறே.

174. ஆறுநீர் போக அமருந் தொண்ணூற்றாறுந்
தேறுமெழு பத்தேழுஞ் சேர்பதி னெட்டுஞ்
சீறுஞ் சலத்தினுச் சாடனம் அஞ்சுக்குங்
கூறும் மந்திரம் ஒன்றாகக் கொண்டதே.

175. கொண்ட தோர் மந்திரங் கூறிய சக்கரம்
எண்டிசை யாற்றிலும் ஏரிக் கரையிலும்
பண்புடன் ஓடும் படகுநா வாயிலும்
எண்பட வையெழிற் காயம் பூசியே.

176. பூசை பலியும் பொருந்திய மந்திரம்
பாச முடனே பதித்துடன் போயபின்
ஓசை விருகவுச் சாடனம் ஒன்பதுந்
தோசம் அறவே தொடர்ந்து துலங்குமே.

177. துலங்கும் புலிபோகச் சொல்லெண்பத் தஞ்சும்
இலங்கும் எழுபதும் எண்பதும் ஆகும்
விளங்குநூற் றொன்பான் வேண்டறுபத் தெட்டும்
உளந்தெண்ப தொக்க விடிற்பன்றி ஓடுமே.

178. ஓடுமே யானை ஒருநூற்று நாலுடன்
கூடுநாற் பத்தேழுங் கொள்ளிருபத் தாறும்
பாடும் பரிதூர மோடப் பதினைந்தும்
நீடுமன் பத்தா றறுபான் நில்லாதே.

179. நில்லாப் பயிரில் நிறைந்தநா வாய்போகச்
சொல்லாய் பதினேழ் தொடர்ந்திரு பத்துநால்
இல்லா திருபத்தெட் டேகுமே தாட்புழு
புல்லா தறுபான் போம்பன்னே ழைம்பதே.

180. ஐம்பத்து மூன்றும் அறுபதோ டெண்பதும்
வெம்பிப் பரக்கும் விரைந்தெலி பாம்புபோம்
அன்பத் திரண்டும் அறுபத்தே ழைம்பதும்
இன்புற்றி லக்கம் இட்டிட நின்றதே.

181. நின்ற விடம்போக நிரைக்குநூற் றொன்றும்
அன்றிய வைம்பதும் ஐம்பத்தெட் டாயிடும்
ஒன்றும் விருகவுச் சாடனம் ஒன்பதும்
துன்றுமோர் மந்திரம் சொல்லுவோம் யாமே.

182. சொல்லிய மந்திரஞ் சூழ்ந்தபின் வைப்பது
நல்லவாங் கொல்லை கழனிநான் மூலையில்
வல்லெலி பன்றி வரைந்து புதைப்பது
நில்லாமற் காட்டில் நீள்புலி போகவே.

183. புலிக்கு மணியில் வரையப் போம்நாவாய்
வலிக்குங் கழனி நடுத்திசை யெட்டும்
பலிக்கும் பசுங்கொம்பிற் தூக்கிப்பாய் நீர்வந்
தலைக்கும் முதன்மடை யாகுந்தாட் புழுவே.

184. புழுவும் புகையும் பொருந்துஞ் சிரத்தில்
அழையுங் குதிரை யானையு மேற்கொள்வார்
தழுவும் விடமுந் தலைதனில் நாடக்
கழியும் பெரும் பாம்பு கண்டத்தில் வைப்பதே.

185. வையாவுச் சாடனம் வந்தவகை எட்டுந்
துய்யாத் தொகையேற்ற தோன்றெழு பான்மூன்று
ஐயானுச் சாடனம் ஆதி அனைத்துக்குந்
தையா வொருவட் டஞ்சாமா னியமே.

186. சாமா னியந் தன்னைச் சக்கர வட்டத்துத்
தாமாக்கில் இத்தனையுந் தப்பாமற் சாதிக்குந்
தாமாந் தியானமுஞ் சத்தி நிறஞ் சித்திரம்
ஆமாந் திக்கும் அமர்ந்தநல் வாயுவே.

187. வாயுவின் மேலே வகுத்த தியானமுஞ்
சேயதிரு மேனியுஞ் சித்திர வன்னம்
ஆய்நின்ற நேரம் அறிகின்ற பிற்சாமம்
போய்நின்ற ஓரை பொருந்து திங்களே.

188. பொருந்து தர்ப்பணம் போம்பதி னாயிரம்
இருந்த செபமும் இதிலொன்று பத்தாம்
ஒருங்கு பதிட்டை ஓமமும் ஆயிரம்
வருந்தா கருடணை வகுத்துரைப் பேனே.

அதிகாரம் 12

ஆகர்ஷண கன்மம்

189. உரைப்பேன் கருணை யுலக மரசர்
பெருப்போதும் பெண்புருடர் பேணும் விருகம்
வருந்தாத சத்துரு வான்சல மோடேழ்
இருக்கும் வகைதனில் இராசா இனியே.

190. இனிய பதினெட் டிசைத்தவைம் பத்தேழ்
துனிய நூற் றெட்டுக்குந் தோன்றும் அரசர்
தனியானை தேர்பரி தான்வரும் நாற்பான்
துனியாகத் தொண்ணூறுஞ் சொல்லு நூற்றஞ்சுமே.

191. நூற்றஞ் சறுபதும் நொய்யபதி னெட்டும்
ஏற்றப் படைகூடும் எண்பதன் பத்தாறுந்

தோற்றுந் தொண் ணூற்றொன்றுஞ் சொல்லிற்றனம் வரும்
ஆற்றும் அரசர்க் காயுதங் கூடவே.

192. கூடும் பதினெட்டுங் கொண்டநாற் பத்தேழுந்
தேடுந்தொண் ணூற்றாறுஞ் சேர்ந்தா கருணையாம்
ஆடும் அரசருக் கைந்து வகை யென்று
பாடும் இவைக்குப் பதிமந் திரமொன்றே.

193. ஒன்றிய மந்திரம் ஓங்கிய சக்கரம்
வென்றியுண் டாக வரைந்து வெளிப்படத்
துன்றிய சத்தி தொழுது துணையாகத்
தென்றி நோக்கித் தியானித் திருக்கவே.

194. இருக்கு மிராசா கருணை யிவைபோய்
உரைக்கு முலகா கருணையை யுற்றுப்
பெருக்கெழுபத் தேழும் பேசன்பத் தெட்டும்
அருக்குமுந் நூறும் அகன்றார் வருவரே.

195. வருமே நினைத்தன வாங்கைப்பத் தஞ்சும்
கருகா வெழுபதுங் கட்டெண்பத் தாறாம்
சொருகா நாற்பத் தேழுந் தொண்ணூற் றிரண்டும்
இருபா னிலக்கம் இடுஞ்சுகம் நாடிலே.

196. நாடிய பின்பதி னாறிரு பத்தாறும்
ஈடிய வைம்பத்தஞ் சிட்டாலன் னம்வரும்
ஆடிய வைம்பத்தே ழாறேழும் பன்னெட்டுங்
கூடுந் தானியங் கொண்டுவரும் என்னே.

197. என்பது முப்பத்தைஞ் செழுபதுந் தொண்ணூ
றன்புடன் வைப்புறும் ஆறாக் கிலேசமாம்

ஒன்பதிற் றேழும் பதினாலும் பன்னேழும்
ஐம்பா னாற்ப தறுபத்தொன் றாம்படை.

198. படைத்த லோகா கருணைவகை எட்டும்
பிடித்தங் கெழுதும் பெரும்புவி தன்னில்
அடைக்குந் தியானம் அரசாக் கருணை
பிடித்தங் கெழுதிடும் பெருமந் திரமே.

199. மந்திரம் வைத்தபின் மா தரா கருணை
பந்தித் திலகம் பதினாறைம் பத்தெட்டு
முந்திய முந்நூறா மோது மிலக்கமும்
வந்தபின் மந்திரம் வைப்பது பாரே.

200. பார்த்திடு மந்திரம் பன்னா றறையிலும்
தூர்ப்பது வட்டத்திற் சொன்னவள் பேர் தாய்பேர்
ஆர்ப்பது புறத்தில் ஆங்கவள் வடிவும்
போர்ப்பதைங் காயம் பொதிதேன் மெழுகே.

201. மெழுகிட்ட பின்னை வெதுப்பும் விளக்கிற்
பழுதற்ற பச்சை சிவப்பிரு பேரும்
முழுதுற் றிரண்டு முழிமாறு கொண்டே
அழுவப் புடைத்து வருமத் தியானமே.

202. ஆன தியான மரும்பெண்ணா கருணை
போன புருடா கருணையைப் போற்றுதும்
ஏனை யிலக்கமும் எண்பதெண் பத்தெட்டும்
ஆனவைம் பத்தொன்று மாமந் திரமே.

203. மந்திரம் வேறு தியானம்பெண் கருணை
தந்த விவன்பேர் தகப்பன்பேர் வட்டத்து

வந்த புருடா கருணை வகைபோக்கி
வந்த விருகா கருணை வளமே

204. வளநூற் றைஞ்சும் வாங்கறுபத் தெண்பதும்
உளம்பட் டியானை ஓடி வரும்புலி
விளங்கவோ ரெண்பதும் வேறைம்பத் தொன்றும்
அளந்தவாறு பத்தெட் டாமிலக்கந் தானே.

205. தானே யறுபதுந் தாங்கெழுப தேழ்
சோனே குதிரைவருங் கொண்டதோர் பன்றி
ஆனா லறுபதும் ஐம்பந்தஞ் செண்பதும்
போனா லினிவரும் போர்ப்பெரும் பாம்பே.

206. பாம்புவரு மைம்ப தையஞ்சு பன்னாறுந்
தூம்பெலிக் கிருப தையைஞ்சு தொண்ணூறும்
நாம்பெற்ற நாற்பதும் நாலேழும் ஐயைஞ்சுந்
தாம்பிற் பசுவருந் தப்பா துரையே.

207. உரைத்த எருமை வரும் ஓது நாற்பான்
புரைத்த வெண் பத்தேழும் போகிய வைம்பான்
கருத்த மரைமான் கரடிக்கு யெண்பான்
நிரைத்த பதினேழும் நீடைம்பத் தாறுமே.

208. ஆறு மிருகா கருடணை யொன்பதுங்
கூறுந் தியானமுங் கொண்ட பெண் புருடர்
தேறும் விருகந் தெளிவகை ஒன்பதும்
ஏறும் மந்திரம் ஏன்றபகை வந்தே.

209. வந்தவைம் பத்தொன்றும் வாங்குமுப் பத்தாறும்
நந்துமோர் நாற்பத்து நாலும் பகைவரத்

தந்த பகைதன தானிய மும்வரப்
பெந்தித் திலக்கம் பினைப்பேசு வோமே.

210. பேசுமொரு நூற்றுநால் பின்னைம்பத் தேழும்
பேசுமிரு பானெட்டும் பின்வரும் சேனை
பாசமுடனே பதின்மூன்றும் ஏழாறும்
மூசுமுப் பத்தெட் டாகும் முயல்வதே.

211. முயலும் பகைவர் சனம்வரு கைக்கு
இயலுமைம் பத்தேழும் எண்பதெண் ணாறும்
அயிலா யுதமவை வரவா றாறும்
பயிலாவெண் ணான்குடன் பதினேழோ டாற்றே.

212. ஆற்றுஞ் சத்துரு வாகருணை யைவகைக்
கேற்றுந் தியானம் எழில்மந் திரங்களுஞ்
சாற்றும் விருகா கருணை யதன்செயல்
போற்றுஞ் சலவா கருணை புகழே.

213. புகழ்ந்தன் பத்தாறும் பொருந் தொண்ணூற் றஞ்சும்
மகிழ்ந்தன்பத் தொன்றும் வருமா மழையும்
நெகிழ்ந்த கிணறு நீர்வர வாறாறும்
மகிழ்ந்தன்பத் தொன்றும் வருநாற்பத் தெட்டுமே.

214. எட்டுஞ் சலவா கருணை இரண்டுக்கும்
இட்ட வியந்திரம் ஏற்றுந் தலங்களிற்
கட்டுமை யன்கோயில் ஆனைவலக் காற்கீழ்
பட்டதோர் மந்திரம் பாருக் கறியே.

215. அறிந்ததோர் மந்திரம் ஆகரு ணைக்குச்
செறிந்தவகை ஏழிற் சேர்ந்த தொகைதான்

முறிந்தவகை கூட்ட முப்பத்தொன் றாகுஞ்
செறிந்த விதற்கொரு மந்திரஞ் சேருமே.

216. சேருமே மந்திரஞ் செப்புற வட்டத்திற்
கூருமே ஐங்காயங் கொண்ட வதன்மேலே
சேருதே யொன்றச் சிறுதேன் மெழுகாலும்
பாருமே வேண்டிப் பதிக்குங் கருத்தே.

"ஓம் ஐம் கிலீம் சவ்: கம் கம் கணபதே
வரவரத ச்வ லோகநாத ஸர்வஸ்த்ரீ புருஷ
வசங்காராய ஸர்வம் சீக்கிரம் அம் அம் ஆம்
க்ரோம் ஹ்ரீம் அம்ஸம் கம்.பல.வவ
கொஸறவ வர வரட்டம் ட்டம் சுவாஹா"

217. கருத்துந் திருமேனி காண்பது நீலம்
திருக்கை இரண்டினிற் சேர் பஞ்ச பாணம்
கருப்புச் சிலையும் கலந்துடன் ஏந்தி
வருத்தி யழைக்கின்ற வாறிது வாகுமே.

218. இதுவா மியந்திரம் ஏற்றிய பின்னைப்
பொதுவா மிரவிற் புனைவிளக் கேற்றி
அதுவா யிருக்கும் அவள்மணக் கோலம்
பொதுவா யிருக்கும் புவனைசக் கரமே.

219. சக்கரந் தன்னைச் செபித்துரு வேற்றிடுந்
திக்கது வேதென்னிற் றென்றிசை யாகிடும்
உக்கிர மாகஉடன்று புவனையைச்
சிக்கென நோக்கிச் செபிப்பது தானே.

220. தானத்திருந்து தயங்கிய வேழினில்
மானொத்த வேல்விழி மங்கையர் மைந்தர்க்கு

யானை குதிரை யரசர் மனையுளே
ஆனை பரியேறும் ஐயன் கோயிலே.

221. கோயிலி லாகுங் குவலையஞ் சத்துரு
சேயில் விருகஞ் செலத்துடன் ஆயுதம்
பாயலில் வந்து படர்நித் திரையொழிந்
தாய தியானம் அறிந்துகொள் வீரே.

222. வீரன்றன் கோயிலில் வேண்டும் பலிசெய்யும்
நேரம் பொழுது போய் முற்சாமம் பின்னோரை
தூரம் பெருகிய சுக்கிர ஓரையாய்ச்
சேரும் இனிச் சொல் சேர்ந்தவித் தேடணை.

அதிகாரம் 13

வித்வேஷண கன்மம்

223. ஏடணை தன்னில் இயம்பும் உலகமும்
வீடணை கின்ற விருகமும் ஆயுத
மோடொரு மூன்று முழன்று வருவகை
பாடுகின் றேனினிப் பற்றிலக் கம்மே.

224. இலக்கம் உலகவித் தேடணை யெண்ணிற்
சொலத்தக்க வாது தொடங்கிடல் வெல்லப்
பலிக்கும் பதினேழ் பாரறுபத் தாறு
நலக்குநாற் பத்தாறும் நாஞ்சொல்லு மதுவே.

225. சொல்லுமது வெல்லத் தோன்றும் பதின்மூன்றும்
நல்ல வெழுபதும் நாற்பத்தெட் டாயிடும்
வெல்லப் பதினேழும் வேண்டுநாற் பத்தெட்டும்
நல்ல நாற்பா னால்வழக்கு வெல்லுமே.

226. வெல்லும் படைக்கு விளங்கொரு நூற்றைஞ்சு
நல்லவெண் பத்து நாலறு பத்திரண்டும்
சொல்லங்கம் வெல்லத் தொடர்ந்தறு பத்திரண்
டெல்லன் பத்தே ழேகுமறு பத்தெட்டே.

227. எட்டிய சொல்வெல் லெழுபத் திரண்டுடன்
தொட்ட தொண் ணூற்றஞ்ந் தோன்றிய நாற்பதும்
இட்ட வெழுத்து வெல்ல இருபத்தாறுங்
கட்டுநூற் றாறுங் காணெழுபத் தேழே.

228. எழுபத்து நாலும் இருநூற் றிரண்டும்
பழுதற்ற நூற்றேழும் பாட்டுகள் வெல்லும்
விழுமப் பெருங்கூத்து வெல்லவெண் ணாறு
முழுது மெழுபது முப்பத்தே ழென்னுமே.

229. என்னுமது மாதரிடை வல்ல வெண்பது
முன்னு பதினால் முயங்குபத் தொன்பதும்
என்னே புருடரிடை வெல்ல வேழேழுந்
துன்னுனாற் பத்தாறுந் தொண்ணூற் றிரண்டே

230. இரண்டாறு நாற்பத் தைஞ்சாறு பத்தாறு
நெருண்ட சிறைவல்ல நேரு மிலக்கம்
முரண்ட விதிவெல்ல முப்பத்தி யாறும்
சுருண்டிருபத் தொன்றுந் தொண் ணூறும் நாடிலே.

231. நாடும் உலகவித் தேடணை நாஞ்சொல்லக்
கூடும் பதின்மூன்று கொண்ட தொகைதானும்
நாடும் இடங்களும் நல்ல சிரஞ்சந்தி
வீடும் இதற்கோர் மந்திரம் வித்தமே.

232. வித்திய மந்திரம் வீசிய சக்கரம்
சத்திய மேசந்தி நாலிற் புதைத்திடு
வித்தை விதியை விலக்கச் சிறைவெல்ல
சித்திர மான சிரத்தில் நின்றதே.

233. நின்ற லோகவித் தேடணை நீள்விருக
வென்றிவித் தேடணை மெத்த வுரைத்திடிற்
போன்று கடாபோய்ப் புலிதனை வென்றிட
வன்றறுப தையைஞ் சறுபா னால்விளம்பே.

234. விளம்புவ தைம்பதும் வேண்டன்பத் தஞ்சுங்
களைந்த நாற்பதுங் கண்ட கடாய் வெல்ல
தளர்ந்த பெருங்கோழி தான்வெல்ல முப்பான்
அளைந்தவிரு பத்தஞ்சும் அன்பதும் ஆமே.

235. ஆமானை போர் வெல்ல ஐம்பதும் நாற்பதும்
போம்நாற்பத் தேழும் பொருந்தும் பரிவெல்ல
ஆமா மறுப்பதும் ஐயைஞ்சும் அன்பதும்
தாமே புலிபன்றித் தனைக்கிடாய் வெல்லுமே.

236. கிடாய் வெல்ல வைம்பதுங் கேழ்பதி னேழும்
அடாதறு பத்திரண் டாகு மிலக்கம்
விடாத விருகவித் தேடணை ஆறும்
கொடாது வென்றிடக் கூறுமோர் மந்திரமே

237. ஒருமந் திரந்தனை ஓதி எழுதிக்
கருதுமைங் காயமுங் காணவே பூசிப்
பொருமக் களத்திற் புதைப்பது பின்னை
நெரியப் பிடிப்பது நேர் நின்று கொண்டே.

238. கொண்டபின் ஆயுத ஏடணை கூறுவேன்
தண்டொடு வில்லுச் சக்கரம் முறியக்
கண்டவன்ப தையேழுங் கரண வெழுபதும்
பண்டைவாள் ஈட்டிப் பத்திரம் முறியே.

239. முறிவது திண்ணம் முனைவது பத்தேழ்
அறுபது மாறெட்டு மான விலக்கம்
செறிபடை யேடணை சேரும் இரண்டு
முறிவன மந்திரம் முற்றிய வாறே

240. முற்றிய வாறு மொழிந்தவிம் மந்திரம்
பற்றிய சக்கரம் பாரித்து வன்றலை
சுற்றிய தோர்கையிற் றோன்ற விருக்கினும்
வெற்றியாகும் விரைந்து முடியுமே.

241. முறிய வழுவது மூன்றுவித் தேடணை
இறியுந் தொகைதான் இருபத்தொன் றாகும்
செறியுந் திசையும் தியானங்கள் தானும்
குறியும் இவையென்று கூறிட நாடிடே.

242. நாடுந் திகையங்கி நன்மேனி தானங்கி
ஆடிய நேரம் அந்தியிரண் டாஞ்சாமம்
தேடிய ஓரையும் செவ்வா யிவைபோக
பீடுற்று போதனம் பின்னை வருமே.

அதிகாரம் 14

பேதன கன்மம்

243. பின்னை யுலகம் பெரிய நிலஞ்சலம்
மண்ணும் புருடரும் மாதர் விருகமும்

பின்னைப் பகையொடு பேசிய தேழ்வகை
தன்னைப் பெருக்கத் தரித்துரைப் போமே.

244. உரைப்போம் நிலபே தனந்தன்னை யோங்கப்
பரிப்போம் பயிராகப் பார்த்திடி லெட்டும்
நரைப்போ மிருபா னாலுந்தொண் ணூற்றஞ்சும்
விரைப்பது நெல்லு விளைவது காணுமே.

245. காணு மிருப திருபத்து நாலுடன்
பூணும்பத் தொன்பதும் போற்றுந் தனம்பொலிய
பேணும் பதினெட்டும் பேசிய வெண்பதும்
கோணுமறு பத்தேழ் கொண்டது தானே.

246. தானியம் மெத்தத் தருலக்கம் நாலாறும்
ஏனைய வெண்பதும் எண்பத்து மூன்றுமாம்
ஊன மரங்காய்க்க ஒன்பானோர் பத்தெட்டும்
ஏனை யிருபத்தா றென்றே இயம்பே

247. இயம்பிரு பத்தஞ் செண்பதுதொண் ணூறும்
குயம்படக் கொட்டாரங் கூடும் பெருக்கும்
நயம்பட நூற்றேழ் நாற்பதைம் பத்தாறும்
செயம்படச் செக்கெண்ணெய் உண்டாம் செகத்துக்கே.

248. செகத்தாலைச் சாறுண்டாஞ் சேர்ந்தநூற் றாறும்
வகுத்த நூற் றொன்றும் வருமெண்பத் தெட்டும்
மிகத்தான் பயிரழிய வேண்டிருபத் தாறும்
நகத்தானோ ரெண்பதும் நாற்பதும் நாடிடே.

249. நாடுந் தனதா னியங்குன்ற நாற்பதும்
மூடுமைம் பத்தஞ்சு முப்பது மாயிடும்

கூடுங்கொட் டாரமும் குன்றவோர் எண்பதும்
நாடன்பத் தஞ்சும் நாற்பத் தெட்டாகுமே.

250. ஆலையிற் சாறு குறையவே யாறெட்டும்
மேலொரு நூற்றேழும் வேண்டும் பதினாறும்
மேலோங்கு மெண்ணெய் குறைய வெழுபதும்
சாலநூற் றாறுஞ் சமைடந்த நூற் றைஞ்சே

251. அஞ்செட்டு முப்பத்தொன் றன்பத்து நாலாகும்
மஞ்சுற் றெழுந்த மரங்கா யுதிர்கைக்குப்
பஞ்சுற்ற விந்தப் பதினா னிலபேதம்
நெஞ்சுற்ற மந்திரம் நீகரு தாயே.

252. கருதிய மந்திரங் கட்டிய பின்னைச்
சொருகு மரமாலை சூழ்செக் கடியிற்
புரையுங் கழனி புனநாலு மூலை
தரியுங் கொட் டாரந் தனதானி யமாமே.

253. தானிய மெத்தத் தருநெல் லுடன்புதை
ஏனை நிலபே தனமெல்லாம் போயபின்
தான மறியத் தயங்கி யினிவரும்
கோனுஞ் சலபே தனமென்று கூறே.

254. கூறுநூற் றொன்றும் குறுகெண்பத் தொண்ணான்கும்
ஆறுநீர் உண்டாம் ஆழ்கிணறு நீருண்டாம்
நூறுந்தொண் ணூற்றேழ் றுவலுமோர் நூற்றுநால்
தேறு மிலக்கந் தேர்ந்துரைப் பதுவே.

255. உரைத்த உப்புண்டாம் ஒருநூற் றிரண்டும்
நிரைத்தநூற் றஞ்சும் நீடுமுப் பத்தெட்டும்

இரைத்தமுத் துண்டாம் இருபத்தெட் டோடே
பரித்ததொண் ணூற்றேழ் பகர்நாற்பத் தாறுமே.

256. ஆறெட் டிருபத்தே ழாகுமெண் பத்தாறுந்
தேறாய்மீ னுண்டாந் தேர்ந்தவன்பத் தஞ்சுடன்
கூறா யெழுபதுங் கொண்டதோ ரைம்பதும்
வேறாய் மரக்கலம் வெட்டுடை யாதே.

257. உடையு மரக்கல முப்பத்தஞ் சோடே
நடைபெற வாறாறும் நாற்பத் திரண்டும்
மடுமீ னிலையாக மற்றெண்பத் தேழும்
மிடையு மெழுபது மிகுமெண்பத் தாறே.

258. ஆறு நீர்வற் றறியுமாறு பத்தாறும்
வேறு மெழுபதும் வேண்டெ முபத்தஞ்சும்
மாறிக் கிணறுநீர் வற்றப் பதினஞ்சும்
ஏறு மிருபதும் முப்பதும் என்னே.

259. என்னுந்தொண் ணூற்றஞ்சும் எண்பதும் நாலாறும்
மன்னி உப்பு மறையுமெண் பானுடன்
பின்னை யறுப தையஞ்சு பெற்ற தொகை
உன்னிய முத்துக் குறையும் உலகே.

260. உலகிற் சலபே தனத்தின் றொகைதான்
பலவற்கம் பன்னிரண் டாகப் பரந்த
அலைபெற்று நின்றே யமருஞ் சலத்திற்
நிலைபெற்ற மந்திரம் நீயென்று வேண்டிடே.

261. வேண்டிய மந்திரம் வீச மியந்திரம்
பூண்டது வைப்பிடம் போற்றுங் கிணறாறு

மூண்டிடு மீனுப்பு முத்துத் துறையிலே
மாண்ட மரக்கலம் வைக்கு மரத்தே.

நீர்ப்பேதன வினை சிறப்பு மந்திரமாவது.

ஓம் கம் கணகண அம்க்ஷம் சிவாய வம்சம்
ஆம் ஹ்றீம் ஶ்ரீம் ட்ச்ம்ரயூம் லம் ஐம்
க்லீம் ஸ்வாஹா

262. மரத்திலே வைத்த மாண்சல பேதனம்
உரைத்துலக பேதம் ஓதுவ தென்னில்
வருத்திச் சபையில் வார்த்தைவெல நூற்றேழ்
பெருத்தநூற் றெட்டும் பேசுநூற்றா றாகுமே.

263. நூற்றா றிருபத்து மூன்றுமுப் பானாறும்
ஏற்றாற் பெரும்பட்டம் எல்லார்க்கும் உண்டாகும்
ஏற்றால் எழுபதும் ஏழேழுந் தொண்ணூறு
மாற்றா நற்குணமுண் டாமறிந் தென்னே.

264. என்றும் புருடர் எழின்மாத ருங்கூட
வென்னும் பதினெட் டிருபதும் பத்தொன்பான்
முன்னுற வுண்டாம் முண்டெழுப தைம்பத்தஞ்
சென்ன தொண்ணூற்றா றிசைத் தங்கிடவே.

265. இடுவ தெழுபத்தஞ் சென்பத்தா றோடே
அடையறுபத் தெட்டு மாஞ்சிறப் பீனும்
இடையெழு பத்தெட்டும் எண்பத் திரண்டும்
தடைநாற்பத் தொன்பதாஞ் சார்சுகம் நாடிலே.

266. நாடுஞ் செட்டுண்டாம் நாற்பானு றிருபானைஞ்
சோடுந் தலைமயிர் உண்டாம் பதினொன்று

மூடெழு பத்தெட்டும் முன்கெட் டதுகூட
ஆடுந்தொண் ணூற்றா றைம்பத் தேழ் நூற்றிரண்டே.

267. இரண்டுதா ரம் முண்டாம் எண்பா னையாறு
மருங்குநூற் றாறுமதிவித்து வானாம்
ஒருங்கெழு பத்தஞ் சுடனெண்பத் தாறும்
நெருங்குநாற் பத்தெட்டும் நின்றது நாட்டிலே.

"இரண்டு ஸ்த்ரீயுண்டா மென்பது ஐயாறு
மருங்கும் நூற்றாறு மதாக வித்துவானும்
மொருங் கெழுபத் தஞ்சுட ணென்பத் தாறு
நெருங்கும் நாற்பத் தெட்டும் நின்றது நாடே".

268. நாட்டுக்கு நன்மையாம் நாற்பத்தெட் டாறாறும்
மூட்டுநூற் றேழாகும் மொய்த்த மனையுண்டாம்
ஏட்டின்மேல் நாற்பத் திரண்டுடன் எண்பதும்
கூட்டும் நாற்பத்து மூன்றுங் குறுகவே.

269. குறுகறு பத்தைந்துங் கொண்டைம்பத் தாறும்
பெறுகவே யென்பதும் பெண்வாழ்வெண் ணாறு
முறுகவே நூற்றைஞ்சும் முன்னைம்பத் தாறும்
பெறுஞானம் உண்டாகப் பேசுவேன் பாட்டே.

270. பாட்டுண் டெழுபதும் பன்னேழும் ஆறாறும்
பூட்டுந் தனமுண்டாம் போயநூற் றைம்பதும்
நாட்டு மெழுபத்தேழ் நாற்பத்து நாலாகும்
தீட்டு மிலச்சையுண் டாகத் தெளியே.

"பாட்டுண் டெழுபதும் பன்னேழ் முப்பத்தாறும்
யீட்டுந் தனமுண்டாகப் பெற்ற நூற்றன்பதும்

நாட்டு மெழுபத்தேழ் நாற்பத்து நாலாகும்
தீட்டு மிலச்சை யுண்டாகத் தெளிவதே"

271. தெளியி லச்சை சேரிருப தெண்ணான்கும்
சுளியபத் தொன்பதாம் சொல்தனம் உண்டாம்
ஒளியெண்பத் தாறும் ஒருநூற்று மூன்றும்
தனியிருபத் தாறாந் தன்வசஞ் சாற்றவே.

272. சாற்றவ தெண்ப தறுபத்தஞ் சைம்பதும்
ஏற்றது பெண்ணான் விடுவதோ ரெண்பதும்
நூற்றஞ் சுடனே நுடங்குமெண் பத்தாறுந்
தோற்றுவே தூரதரிசனச் சொல்லே.

273. சொல்லிற் பதினெட்டுந் தொண்ணூறெண் பத்தொன்றும்
நல்ல வறுபதும் நாற்பதைம் பத்தொன்றும்
கல்லாமற் காலங்கள் மூன்றும் உணரலாம்
எல்லாஞ் சித்தியே மேழெழுப தய்யாறே.

274. அய்யாறு பன்னஞ் சறுபான் கூடுபுக
மெய்தான் பருக்க விளம்பெண்பத் தொன்பது
துய்தாந்தொண் ணூற்றுநால் தோன்றாயு ளுண்டாக
எய்திரு பத்தா றெண்பா னேழ் பத்தொன்றே.

275. ஒன்று மாரோக்கியம் ஓங்கப் பதினாறும்
நின்ற தேயைம்பதும் நீண்டெழு பத்தஞ்சும்
சென்று சொல் வார்த்தை தெளியாமற் றான்மாற
வன்றறு பத்தே ழுறுபதைம் பத்தாறே.

276. ஆறும் பதினேழும் அன்பத் திரண்டுமாம்
சீறி யழியுஞ் சிறந்த பெரும்பட்டம்
வேறு குணங்கெட வேண்டிற் பன்னிரண்டும்
பாறும் பதினெட்டும் பற்றும் நூற்றஞ்சே.

277. அஞ்சும் பதினாறும் ஆகிய தொண்ணூறும்
வஞ்ச மாதர் புருடர் மனம்பிரிய
வஞ்சி யுறவு கெட வாங்கையம்பத் தெட்டும்
புஞ்சி பதினாறும் பாறும் பன்னஞ்சே.

278. பதினஞ் சிருபத்தா றெண்பத் திரண்டும்
கொதிவஞ்சி நெஞ்சிற் சார்சுகங் கூறாது
முதுவித்தை தான்கெட முப்பத்து மூன்றும்
அதுபெற்ற வைம்பதும் ஆறாறும் ஆகுமே.

279. ஆறேமு பத்தஞ் சையெட்டு நன்மை கெட
ஆறே ழையஞ் சறுப திறப்பொழியத்
தோறே செட்டில்லைத் தேர்ந்த வெழுபத் தொன்பான்
வேறே நூறாம் வேண்டுதலை தட்டைக்கே.

280. தட்டுற நாலாறு தானஞ்சும் நாற்பதும்
கெட்டது கூடா திருக்கக் கிளர்வது
எட்டாறு நாலா றிருபானேழ் பாட்டொழி
யிட்ட விருபா ணூற்றே ழெழுநாலே.

281. நாலஞ் சிருபத்தஞ் செண்பத்து நாலாகுங்
கோல மனைகெடக் கொண்ட பெண் வாழ்வில்லை
சாலறு பத்தொன்றுந் தக்கறு பத்தாறும்
மேலைம்பத் தெட்டும் விளங்கிடு மெண்ணே.

282. எண்பத்து மூன்றும் இயம்பொரு நூற்றாறும்
அன்புற்ற நூற்றிரண் டாகிய ஞானம்போம்
பின்புற்ற வாறாறும் பேசெழுப தையைந்தும்
தன்பற் றலன்றன் தானியங் கெடுமே.

283. கெடும்லச்சை நூற்றேழ் கேளிருப தெண்பான்
இடுதன தானியம் கெடவீ ராறும்
படுபதி னைந்தும் பகருந்தொண் ணூறும்
நெடுந்தூரந் தன்னிற் றரிசனம் நேராதே.

284. நேரா தறுபதும் நீண்ட பதினேழும்
கூறா தெழுபதும் கொண்டபெண் ஆண்கெடப்
பாரா பதினாறும் பையவே நாற்பதும்
தூரார் தொண் ணூற்றேழ் சொல்லி முடியவே.

285. முடியவே தன்வச மாகாமை முப்பான்
நெடியவிரு பத்தேழ் நேருநூற் றெட்டாம்
நடைகண் தெரியாமை நாற்பத் தொன்றோடே
அடையுமறு பத்தெட்டோ டைம்பத் திரண்டே.

286. இரண்டேழு தொண்ணூற் றென்றிருபத் தாறு
திரண்ட திரிகால ஞானஞ் சிதற
மருண்ட சரீரசித்தி மாறும் நாற்பான்
முரண்டிருபத் தாறுடன் முப்பானேழ் தானே.

287. தானே சீர்கெடுந் தக்கவிரு பத்தொன்றும்
ஏனை யிருபதும் எண்பத்து நாலுமாம்
ஊனைந் துடம்பு வுலர்வெழு பத்தாறும்
ஞானநாற் பத்தெட்டும் நாற்பத்து மூன்றே.

தானஸ் திரீ கெடுந்தக் கறுபத் தொன்று
மனையிருபது மெண்பத்து நாலுமா
மேனைந்துடம்பு மெலிய வெழுபத் தாறும்
நானே நாற்பத் தெட்டு நாற்பத்து மூன்றுமே.

288. நாற்பதுதன் னுடனூற்று நால்பன் மூன்றும்
கீற்றுப்பட் டாரோக் கியங்கெடு மெண்பத்தேழ்
தோற்றறு பத்திரண்டுந் தொண்ணூற்று நாலும்
ஆற்றிய ஆயுள் அன்றே கெடுமென்னே

289. என்னே உலக வியற்பே தனவகை
அன்னே யதன்றொகை அன்பத்தெட் டானது
பொன்னே யிதற்குப் புகலுவோம் மந்திரம்
முன்னே் பரமன் மொழிந்த படியே.

290. படியிற் பதித்தது மந்திரந் தானும்
நடுமேற் றிசையினில் நாம துரைப்போம்
விடுமத் தலையினும் வீட்டினும் நன்மைக்
கிடுமந்தத் தின்மைக் கியற்சாத்தன் கோயிலே.

291. கோயிலில் இட்டுக் கூறுலக பேதனம்
போயபின் பெண்ணிற் பொருந்திய பேதனம்
ஆயிலொரு கன்னிகூட அருபதும்
ஏயிலோர் ஐம்பான் எண்பத்தா றொத்ததே.

292. ஒத்தமுலை யுண்டா மோர்நூறு மையேழும்
முத்திமுப் பத்தாறும் முதிர்ந்தாள் தெருள
அத்தோடைம் பத்தேழும் ஆகுமுப் பத்தாறும்
மொத்த வறுபதும் வேண்டிலக் கம்மே.

293. இலக்கம் பதினஞ் செழுபத்தெட் டோடே
உலக்கநாற் பத்தாறும் உண்டாகும் கர்ப்பம்
நலக்க அரிவையர் நாற்பதும் முப்பான்
பலிக்குமன் பத்தேழ் பகம் பெருக்கப் பாடே.

294. பாடெழு பத்துநான் கைம்பதும் பன்மூன்றும்
தேடிய வீறுண்டாம் செப்பிய நாலேழும்
நாடிய பதினைஞ்சும் நாற்பத்து நாலும்
கூடிய போகங் குறுகிப் பெருகவே.

295. பெருக்கும் பதினைந்தும் பேசறுபத் தெட்டும்
இருக்கும் எழுபதும் எய்தும் பெரும்பாடு
துரக்குந்தொண் ணூற்றேழுஞ் சொல்லிய வைம்பதும்
அருக்கும் இலக்கம் அறுபது மாகுமே.

296. அறுப தெழுப தறுபத்து மூன்றுங்
குறுகி முலைசுருங்குங் கொண்டாள் கூடாள்
அறுப தறுபத்தெட் டோடைம்பத் தாறும்
அறுப தெழுப தையஞ்சேல் தெருளாதே.

297. தெருளா திருக்கத் தேரறு பத்தாறும்
இருளாக முப்பத்தஞ் செண்பதும் இட்டால்
அருளா தரிவை வெறுக் கைம்பத் தாறும்
பரியா விருபதின் மூன்றும் பதினாலே.

298. நாலெட்டு முப்பத்தேழ் நாற்பத்து நாலாகிற்
காலாற்றுக் கர்ப்பங் கழியுந் தரியாமல்
மேலைப் பகஞ்சுருங்க வேண்டுமை யைந்தும்
ஆலிக்கும் ஐம்பத் திரண்டறு பத்தே.

299. அறுபத்து மூன்றுடன் ஐயைஞ்சீ ராறும்
வெறிகெட் டுடைந்து வீறழிந்தே னெனும்
பொறிகெட்டுப் போகம் போமிரு பத்தாறும்
முறுகிப் பதினைஞ்சும் முப்பத்தெட் டாகுமே.

300. எட்டுநாற் பத்தே ழெழுபான் பதினாறு
தட்டுற் றழிந்து தரிக்கும் பெரும்பாடு
ஒட்டிப் பதினெட்டாம் ஓதுபெண் பேதனம்
கட்டுற்ற மந்திரங் காணவொன் றாக்கே.

புருடர் பேதனம்

301. ஆக்கிய மந்திரம் ஆகுபெண் பேதனம்
போக்கிய பின்னைப் புருடர்பே தனமாம்
நோக்கினார் கூட நொய்யவிரு பத்தஞ்சுங்
காக்குமுந் நூறுங் கலைபதி னாறே.

302. பதினாறும் முந்நூறும் பாரெண்பத் தேழும்
அதிராமற் கண்டவர் ஆசைப் படுவர்
சதிராகத் தண்டுவளரப் பதினேழ்
புதிதாகத் தொண்ணூறும் போற்றிருபத் தெட்டே

303. எட்டும் பதினாறும் ஏழேழுந் தொண்ணூறும்
தட்டிய தாது தரிப்பின்றி வர்த்திக்கும்
ஒட்டிய தொண்ணூ றுரைத்த விருபதும்
கட்டிய நாற்பதுங் காணும் பிறிவே.

304. பிரிந்து பிணங்கப் பெறுநூற் றிரண்டுஞ்
செறிந்த பதினொன்றுஞ் சேரன்பத் தெட்டும்
எறிந்த எழுபதும் எண்பத்து மூன்றுந்
தறிந்த பதினாறுந் தண்டு சுருங்கவே.

305. சுருங்கு பெருந்தாது வர்த்தனங் குன்ற
மருங்கு பதினாறும் மற்றெண்பத் தஞ்சும்
இருந்த பதினெட்டாண் எய்து பேதனம்
ஒருங்கு வகையெட் டுரைக்கிலிங் குற்றதே.

306. உற்ற வனமிருக பேதனம் ஓதில்
நற்றெருமை பாலுண்டாம் நாற்பத் திரண்டும்
மற்ற நாற் பத்தேழும் மன்னுமைம் பத்தெட்டும்
உற்றெருமை யுண்டா மொன்றினிச் சாற்றே.

307. சாற்றிற் பதினெட்டு மெண்பானெண் பத்தொன்றும்
ஏற்ற பசுவுண் டிருபானேழ் பன்னாறும்
நாற்பத்தெட் டாயிடில் நாற்பதப் பாலுண்டாம்
ஆற்ற பசுவு மாமெருமை கேடே.

308. ஐம்பத் திரண்டுடன் ஐயைஞ்சு முப்பதும்
கம்பத்து நின்றிடு காராப் பால்குறைய
எண்பத்து நாலுடன் ஏழேழ்தொண் ணூற்றாறும்
அன்பத்தொன் றாறா றுப தாக்கேடே.

309. கெடுமே பசுப்பாலுங் கேழ்தொண்ணூற் றாறும்
தொடுமே பதினொன்றுந் தொண்ணூற் றிரண்டும்
இடுமே இயல் விருக பேதம் எட்டும்
படுமே யொருமந் திரமாகப் பற்றவே.

310. பற்றிய மந்திரம் பாரித்த சக்கரம்
ஒற்றிப் புதைக்க உரைகொட்டில் தன்னிலே
பெற்றாகச் சத்துரு பேதனஞ் சாற்றிடில்
அற்றைப் பகையறு பானூ றையேழே.

311. ஏழிரண்டு நூற்றா றியல்பதி னேழும்
சூழ்பகைவர் சேனை தொடர்ந்து வரவே
ஆழும் பதினா றுபதும் நூற்றேழும்
தாழும் பகைக்குத் தனதா னியமே.

312. தானாம் பதினைஞ் இருபத்தெட் டையஞ்சும்
ஆனாற் பகைவர்கை யாயுத முண்டாகும்
நானாப் பகைகெட நாடுந்தொண் ணூற்றாறும்
ஏனைப் பதின்மூன் றிருபானா லிடவே.

313. இடுவது சேனை கெடப்பதி னாறும்
கொடுவது பன்னேழ் கொண்ட தொண் ணூற்றாறுங்
கெடுவது செல்வங் கிளரெழு பத்தெட்டும்
நடுவதைம் பத்தாறும் நாற்பத்து மூன்றுமே.

314. மூன்றெட்டும் நூற்றஞ்சும் முற்றுந் தொண் ணூற்றெட்டும்
ஏன்று பகைவர்கை யாயுதம் இல்லையாம்
சான்று படவிந்தச் சத்துரு பேதனம்
ஊன்று வகையெட்டுக் கேள்மந் திரமே.

315. மந்திரஞ் சாற்றி வகுத்தவிச் சக்கரம்
தந்திர மேற்கொண்டு சாத்தன்றன் கோயிலில்
வந்தா ரறியாமல் வைத்துப் பலியிட்டுச்
சந்தாபந் தீர்க்க சாத்தாவென் றோதிடே

316. ஓதிடு பேதனம் ஓரேழும் அத்தொகை
ஓதிடு நூற்றிருபத் தாறுல குக்குக்
காறிட வந்து கருதுந் தொகை தன்னில்
தீதிடு பேதத் தீண்டாமந் திரமே.

317. தீண்டாத மந்திரம் தீதாங் கருமத்தில்
தூண்டாத மந்திரம் சொல்லிய நன்மைக்கு
மாண்டாத புறவட்டந் தன்னில் வரைய
வேண்டுவ தென்று விளம்பினன் நாதனே.

318. நாதன் அருளினன் நன்மைக்கு வைப்பிடம்
கோதில் சிரத்திலுங் கொண்ட மனையிலும்
வாதிக்குந் திண்மை வருமையன் கோயிலில்
வேதிக்க வந்து வெளிப்பட்ட வாறே.

319. வெளிப்பட்ட மேனியும் வெண்மைய தாகும்
அளிப்பட்ட நேரம் அந்திமூன் றாஞ்சாமம்
ஒளிப்பட்ட ஓரையும் ஓர்புத னாகும்
களிக்கின்ற வாறு கருத்தொக்கப் பட்டதே.

அதிகாரம் 15

மாரண கன்மம்

320. பட்டவா றெல்லாம் பகர்ந்தது பேதனம்
விட்டபின் மாரணம் வேண்டுவ தேதெனில்
தொட்ட விருகமுந் தோன்று சத்துருவும்
கட்டிய பின்னைக் காணுமா ரணமே.

321. மாரணஞ் சத்துரு மன்னுமறு பத்தேழ்
காரணம் பன்னாறுங் காணுமறு பத்தெட்டும்
மாரணங் கர்ப்பம் வந்தவறு பத்தேழும்
சாரணம் பத்தெட்டுஞ் சாருமைம் பத்தாறே

322. ஆறெட்டுப் பன்னே ழுறுபது பிள்ளைசாஞ்
சீறிட்டுச் சேனைசாஞ் சேர்ந்தநாற் பத்தொன்றுங்
கூறிட்ட முப்பதுங் கொண்டமுப் பத்தாறும்
மாறிட்டுச் சாகும் மனைவி மற்றதே.

323. மற்றப் பதினேழும் மாறிய தொண்ணூறும்
கற்ற வைம் பத்தாறும் கண்சா முறைத்திடில்

செற்ற விருபத்தேழ் சேரறு பத்தாறு
முற்றமுப் பத்தாறு முன்பாக வற்கே.

324. பகையில ராகப் பகரிரு பத்தெட்டும்
வகைபெறு முப்பதும் வாங்கைம்பத் தொன்றும்
நகரிலை சத்துரு நாசமே ழேழுந்
தொகை மும்பத் தாருந் தோன்நாற் பத்தெட்டே.

325. எட்டாம்பகை மாரணம் என்னும் விருகம்
சொற்றாற் கரிசாகத் தோன்றுமறு பத்தேழ்
முட்டாத வன்பத்து நாலுடன் முப்பதும்
பட்டாற் பரிசாம் பார்வகை யினியே.

326. இனியது கேளாய் எழுத் திரண்டும்
தனியொரு நூற்றொன்றுந் தான்முப்பத் தாறும்
கனியவே ஆடுசாம் காணென்பத் தாறும்
துணியுந் தொண் ணூற்றஞ்சுஞ் சொல்லு மிருபதே.

327. இருபத்து நால்பதி னாறெண்பத் தேழும்
எருமைக்கு நாசம் ஏன்ற பசுநாசம்
ஒருபத்து நாலும் நூற்றறு பத்தேழும்
உருமுப்பத்தாறு முடனென்று சாற்றிடே

328. சாற்றும் விடநாசந் தாங்கிய ஐம்பதும்
ஏற்றும் அறுபத்தே ழெண்பத்து நாலாகும்
தோன்றும் வன்மிருக நாசவகை ஆறாம்
போற்றும் மாரணம் பன்னான்காய்ப் புக்கதே.

329. புக்கவா றெல்லாம் பொருந்திய மந்திரம்
தக்கவா றெல்லாம் உரைக்குந் தலையோட்டில்
ஒக்க மயானக் கரியால் தோட்டெழுதிச்
சிக்கெ னச்சுடு காட்டிற்சே ரிராவே.

330. இராவெட்டு சாமம் ஈசான திக்கிலே
பராவிய பேய்கள் கணங்கள் பசாசு
குரோதிகள் ஆயுக் குறையவென் றேத்திப்
புரோகித னோடும் பொருந்தி இருக்கவே.

331. இருப்பது ஈசானத் திக்கினை நோக்கி
ஒருப்பது மேனி யுருக்கறுப் பாகும்
தரிப்பது சூல கபாலங் கைகளில்
நெருப்பது நயனம் நினைந்துகொள் நீயே.

மூன்றாம் தந்திரம்

பொதுவியல்

16 ஆம் அதிகாரம்

தந்திரப்பொது

332. கொள்ளும் வசியமுங் கூறிய மோகனம்
தள்ளிய தம்பனம் தாங்கும்உச் சாடணம்
அள்ளிய வாரானை ஆனவித் தேடணை
துள்ளிய பேதனம் தொன்மா ரணமே.

333. மாரண மீறாய் வசிய முதலான
காரண கன்மங் கலந்த வகையெட்டுந்
தோரண மாகத் தொகையொற்றிப் பார்த்திட
ஏரண முந்நூற் றிருபதாய்ச் சார்ந்ததே.

17 ஆம் அதிகாரம்

தியானப்பெது

334. சார்ந்த இலக்கமும் சாற்றிய வீசமும்
சேர்ந்த வெழுத்தும் செறிந்தவிச் சக்கரம்

ஆர்ந்த புவனை அறியுந் திருமேனி
ஓர்ந்தங் கிருப்ப துரைக்கலு மாமே.

335. உரைக்கில் வசியம் ஒளிதிகழ் செம்மை
புரைக்கினு மோகனம் பொன்னிற மாகும்
நிரைக்கிலுந் தம்பனம் நீண்டவிப் பச்சை
உரைக்கில்உச் சாடனம்ஓர் பஞ்ச வண்ணமே.

336. வண்ணங் கருணைக்கு வாய்த்த நிறம் நீலம்
திண்ணவித் தேடனை சேர்ந்த பவளமாம்
பண்ணின்ற பேதனம் பாற்கிற் பளிங்கொக்கும்
உண்ணின்ற மாரணம் ஓதுங் கறுப்பே

தியானத் திருவுருவம்

337. கறுப்புற்ற செம்மேனிக் கண்ணொடு மூன்றாம்
குறிப்புற்ற செஞ்சடைக் கொண்ட மதியம்
உறுப்புற்ற திண்புயம் ஒன்றிய நாலாம்
குறிப்புற்ற பாசாங் குசமும் இருகையே.

338. இருகை வசியமே யாகரு ணைக்கு
மருவு கரும்புவில் மாண்பஞ்ச பாணம்
பொருவது மோகனம் போந்தம் பனமும்
தருவ திருகையிற் சக்கரஞ் சங்குமே.

339. சங்கை யெழியத் தருவதுச் சாடனம்
புங்கயஞ் செங்கையிற் பாசங் கடகம்வாள்
வெங்கண்வித் தேடனை வெண்டலை முசலம்
அங்கமது பேதம் அபய வரதமே.

340. பயங்கத்து மாரணம் பற்று மிருகை
புயங்கத்துச் சூலங் கபாலம் பொருந்தும்

வயங்கத் துயிலும் வடிவுக் கிசையும்
பயங்கெட் டிருப்பதும் பதுமா சனமே.

341. ஆசனந் தாமரை அங்கையுந் தாமரை
மூசிய கொங்கையும் முகிழ்ந்த தாமரை
வாச முகமும் மலர்ந்தசெந் தாமரை
கோசங்கொள் கோயில் கொண்ட தாமரையே.

திருமுகம் கமலம் இணைவிழிகமலம்
செவ்வாய் கமலம் நித்திலந்தாழ்
வருமுகை கமலம் துணைக்க ரங்கமலம்
வலம்புரிஉந்தி பொற்கமலம்
பெருகிய அல்குல் மணித்தடம் கமலம்
பிடிநடைத் தாள்களும் கமலம்
உருவவட் கவ்வாறாதலின் அன்றே
உயர்ந்தது பூவினுட் கமலம்

18 ஆம் அதிகாரம்

இயந்திரப்பேது

புவனாபதி சக்கரவடிவம்

342. தாமரையாகும் பதினா றறைகளும்
தாமரை யல்லி தரித்த அறுகோணம்,
தாமரை யாசன்ந் தையல் இருப்பது
தாமரை யெட்டிற் சத்தியங் கெண்மரே

19 ஆம் அத்தியாயம்

அஷ்ட சக்திகள்

343. அங்கெண்ம ராவர் அனங்க குசுமையும்
அங்க மேகலை அனங்க மதனையும்

அங்கமத னாதுரை அனங்க ரேகை
அங்க வேகினி அனங்காங் குசையே

344. அனங்கமா லினியோ டாய எண்மரும்
புனைந்தங்கு சத்தியைப் பூசித்துப் போற்றி
நனைந்தங்கு நாற்புயம் நற்பா சாங்குசம்
இணைந்தங் கிருகையில் இருப்ப தினியே

345. இனியிரு கையில் இருப்பது வட்டில்
தனியால வட்டம் தாம்பூலம் சத்திரம்
புனைசா மரங்கிளி மாலை புடவை
தனியிவர் எண்மருந் தவங் கேட்பதுவே.

346. கேட்பது சத்தி கிளக்கும் பெரும்புகழ்
தாட்பது பூமுடி சத்தி யிருபதம்
சேட்படுகின்ற சிவசத்தி மேனியைக்
கோட்படக் காட்டுங் குருபரன் கோலமே.

20 ஆம் அதிகாரம்

புவனாபதியின் திருவடிவம்

347. கோல முடைய குருபரன் அல்லது
ஞால மதனில் நயந்தறி வாரில்லை
சீல முடைசிவ சத்தியைக் காண்பவர்
காலம் ஒழியக் கருத்துணர்ந் தாரே.

348. உணர்ந்து கொண்டேனுயிர் உள்நின்ற சத்தியைப்
புணர்ந்து கொண் டேன்புவ னாபதியாரை
இணங்குகின் றேனெங்கள் ஈசன்ற னோடே
வணங்குகின் றேன்நந்தி வாய்த்த வடிவையே.

21 ஆம் அதிகாரம்

புவனாபதி சக்கரம்

349. அடிநிலம் நீரங்கி ஆடிடும் வாயு
முடிநின்ற வாகாயம் முற்றிய சத்திகள்
இடைநின்ற சக்கரம் வீசம் இலக்கம்
வடிவென்று சொல்லி வகுத்த படியே.
உலகமே உருவமாக யோனிகள் உறுப்பதாக
இலகுபே ரிச்சா ஞானக்கிரியையுட் காரணமாக
அலகிலா உயிர்ப்பு லன்கட் கறிவினையாக்கி ஐந்து
நலமிகு தொழில்க ளோடும் நாடகம் நடிப்பன் நாதன்
(சித்தி 237)

351. படிபதி னாறறை பற்றிய தேதேர்
அடிமதி யாதித்தன் ஆகும் உருளை
வடிவிலி வேதம் வகுத்த புரவி
கடவிய பாகனுங் காணான் முகனுமே
351. நான்முகன் றாதையும் நாடாத சத்தியை
வான்முகம் நாடி வகுத்தவிச் சக்கரம்
ஊன்முக மாகி உதித்தே முலகத்தைப்
பான்முக மாகிப் பறந்திடும் எட்டிலே.
352. எட்டுக் குணமும் இசைந்த காணமும்
பட்டாவிப் பூதமும் பாடும் அவத்தையும்
கட்டிய வாயுவும் காணுமா தாரமும்
ஒட்டிய சத்தி உருவது தானே.

22 ஆம் அதிகாரம்

சக்கரபூசை

353. உருவது வாக உரைத்த சக்கரம்
குருபரன் காட்டுங் குறியை யறிந்து

கருதிய கன்மத்தைக் காட்டிட வேண்டி
வரைவது பட்டோலை வான் செம்பு பொன்னாமே.

354. பொன்னொத்த மேனிப் புவனையின் பூசைக்கு
வன்னத்துக் கேற்ற மலர்கந்த தூபமும்
பன்னொத்த வேதத்திற் பாடும் பதினாறுங்
கன்னிக்கு வைக்குங் கருத்தது வாமே.

23ஆம் அதிகாரம்

பொதுமந்திரம்

355. அதுவாங் கருத்தாகும் அச்சிவ சத்தி
பொதுவாம் புகழும் புகல்மந் திரமும்
அதுவா மிலக்கம் அக்கர சக்கரம்
பொதுவாம் பிராணப் பதிட்டையும் போற்றிடே.

24ஆம் அதிகாரம்

மந்திரம், தந்திரம், யந்திரம்

356. போற்றும் பதிட்டையும் ஓமமும் ஆயிரம்
ஏற்றுஞ் செபமும் இசைந்த நூறாயிரம்
ஏற்ற கருமங்கள் எட்டுக்குந் தானொக்கும்
ஆற்றிய சக்கரம் ஆய்ந்துகொள் வீரே.

357. கொள்ளும் இடக்கையிற் கோட்டிய சக்கரம்
உள்ளி வலக்கையால் மூடியோர் பூசாத்தி
எள்ளில் பதிட்டை இருபத்து நாலுருத்
தள்ளி வலக்கைத் தானிருக்குஞ் சத்தியே.

358. சத்தியின் மூலம் இருபத்து நான்குரு
மொய்த்த வலக்கையால் மூடியோர் பூச்சாத்தி

இத்தை மாதேவ ரெம்பிரான் கைக்கொடுக்க
அத்தை அவர்கையாகத் தருவதே.

25வது அதிகாரம்

எண்வினை இழைகள்

359. தருவர வக்கர சக்கர சத்தி
பருவ முதிராத பாலிகை கன்னி
இருவின நூலால் ஏற்கும் வினைக்கு
மருவிய கருமம் வகைவகை தானே.

360. வகையாகும் வசியம் ஆகருணைக்குத்
தொகையா மிரண்டிழை சொற்ற மோகனம்
பகையாகும் ஏடனை பற்றுநூல் மூன்றாம்
பகையாகும் தம்பனம் போக்குநால் நூல்தானே

361. நூலஞ்சு பேதனம் ஆறிழை மாரணம்
காலொன்றக் கட்டிக் கருத்தொக்கச் சூழ்ந்தபின்
பாலொன்று மென்மொழிப் பங்கயச் சத்திக்கு
சேலொன்று மோமங்கள் செய் மந்திரமே.

26 ஆம் அதிகாரம்

மந்திரம் வந்த மரபு

362. மந்திரங் கொண்டு மதிக்கின்ற ஓமமுந்
தந்திரந் தர்ப்பணஞ் சாற்றுமந் திரமும்
நந்தியெம் நாதன் நவையற ஓதினன்
பைந்தொடி மேனிப் பயனிது தானே

363. பயன்றான் அறியலாம் பற்றற் றிருந்தால்
நயந்தான் மிகவுண்டாம் நந்தி அருளால்

உயர்ந்தார் உரைத்தது ஓதிய பின்னை
நயந்தால் பிறக்கிது நன்மையுண் டாகுமே

364. நன்மையுண் டாமெங்கள் நாதன் உரைத்தது
திண்மையின் றாகத் தெளிவிக்கும் நாதனைத்
தன்மையுண் டாகத் தனித்தனி நாடிப்போய்ப்
பொன்மையுண் டாகப் புகழ்ந்துகொள் வோர்க்கே

365. கொள்ளுவார் கொள்ளுங் குருவின் அருளாலே
உள்ளுவார் உள்ளும் உடனின்ற சத்தியைத்
தெள்ளுவார் வாலை புவனை திரிபுரை
கள்ளுவார் பூங்கோதை காரணி பேரே.

366. காரணி பேரொடு கண்ணுதல் அண்ணலைப்
பூரண மாகப் புரைதோன்றும் போக்கிற்கு
ஆரண வேதம் அறியாத சத்தியை
நாரண னந்தி நமக்குரைத் தானே

27 ஆம் அதிகாரம்

குருவருள்

367. உரைத்த பரப்பெலாம் ஓதவும் வேண்டா
குருத்துவ மாகிய கூத்த னருள் பெற்று
ஒருக்கியைம் பூத மூடன்கர ணாதி
வருத்தி மனத்தினில் மரிக்கவல் லார்க்கே.

28 ஆம் அதிகாரம்

புவனாபதி யந்திர மந்திர தந்திரம்

368. வல்லார் வகுத்த வியந்திர மந்திரம்
நல்லார் நயந்தெங்கள் நாதனருள் பெற்றார்

கல்லார் பிறபொருள் காணார் கருத்தினிற்
செல்லார் செகத்திற் சினந் தணிந்தாரே.

369. தணித்தவிச் சத்தியைச் சாதித்த பின்னை
அணிந்தகன் மாதி அடைவுகள் எல்லாம்
துணிந்துதன் னுள்நின்ற சோதியை நாடிப்
பணிந்திருந் தவர்க்குப் பரகதி யாமே.

370. பரந்த பரப்பெல்லாம் பங்கய மாகக்
கரந் தெங்கும் உள்நின்ற கன்னியை நாடில்
வரந் தரும் வல்வினை யெல்லாம் ஒழியும்
உரந் தரும் மந்திரம் ஓதவல் லவர்க்கே.

371. ஓதிய சக்கரத் துண்ணின்ற சத்தியைச்
சோதியென் றுள்ளே தொழுதுடன் நோக்கவே
ஆதியும் அந்தமும் ஆய்நின்ற சோதியைப்
பூதமைந் தாகப் புனைந்து வைத்தாரே

29 ஆம் அதிகாரம்

புவனாபதி மந்திரமும் அதன் பயனும்

372. வைத்தார் புவனை திரிபுரை மந்திரம்
ஒத்த பனிரண்டுடன் மூன்றெழுத் தாகும்
முத்தி முதலும் முடிவிலா வானந்தம்
பத்தித் தலையிற் பன்னிரண்டா தியே

✻✻✻